பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 வைகாசி 3 ஜ: அவ்: 26 இதழ்: 94
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 16-5-77

# 'தமிழ் மக்கள் முன்னணி' புதியகட்சிஉதயம்!

யாழ்ப்பாணம், திங்கள்

'தமிழ் மக்கள் முன்னணி' என்ற பெயரில் புதிய கட்சியொன்று யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

தமிழ்ஈழம் அமைக்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி குரல்எழுப்ப, பிரதேசசுயாட்சிக் கோரிக்கையை கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்த, குறுகியகால பொருளாதாரத் திட்டத்தை அடிப்படையாக வைத்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பிரதேசசுயாட்சி பெற்றுக்கொடுப்பதை இலட்சியமாகக் கொண்டு கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறது "தமிழ் மக்கள் முன்னணி".

யாழ்ப்பாணம் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியிலுள்ள மகேந்திரா இல்லத்தில் பல்துறைப் பிரமுகர்கள் மத்தியில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட இப்புதிய கட்சி, நாட்டுக்குச் சேவையாற்ற தேர்தலை ஒரு கருவியாக பயன்படுத்தவும், தமிழ்பேசும் மக்களுக்கு பிரதேசசுயாட்சி, தமிழ்மொழிக்கு சுயஅந்தஸ்து, சாதிசமய அடிப்படையில், நியமனம் பிரவேசங்களை தடைபண்ணல், தமிழ்பிரதேசங்களில் திட்டமிட்ட தமிழர் அல்லாதார் குடியேறுவதைத் தடைபண்ணல், சர்வதேச ரீதியில் நட்புறவுபோன்ற அடிப்படைக் கொள்கைகளையும் ஐந்தாண்டுக்கான குறுகிய பொருளாதாரத் திட்டங்களையும் கொண்டு செயல்படவுள்ளது.

இதற்காக ஐவர்கொண்ட குழு ஒன்றும் தெரிவாகியுள்ளது. இக் குழுவில் திரு. யோகேந்திரா துரைச்சாமி திரு நாவேந்தன், திரு. கே. வி. எஸ். திருலோகமூர்த்தி, திரு. செ. தில்லைநாதன் ஜே.பி:, திரு.ச.கைலாயபிள்ளை ஆகியோர் உள்ளனர். அமைப்புக் குழுச் செயலாளராக திரு. யோகேந்திரா துரைசாமி தெரிவாகியுள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# காங்கேசனில் 'அமிர்'

# நல்லை.சிவா; குமார் இல்லை

## வட்டுவில் திருநாவுக்கரசு

### குமார் பருத்தித்துறையில் நிற்பது உறுதி

கொழும்பு, திங்கள்

**தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம், தந்தை செல்வநாயகத்தின் தொகுதியான காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழர் கூட்டணியின் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

தமிழர் விடுதலைக் கூட்டணி அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தெரிவு செய்துள்ள வேட்பாளர்கள் பற்றி இதுவரை இருபத்தைந்து பேர்களின் பெயர்களை அறிவித்துள்ளது. சேருவிலைத் தொகுதியில் யாரை நிறுத்துவதென்பது பற்றி இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை.

### வட்டுவில் திருநாவுக்கரசு

தமிழ்க் காங்கிரஸின் பொருளாளரான திரு. தா. திருநாவுக்கரசுவை வட்டுக்கோட்டைத் தொகுதியில் கூட்டணி வேட்பாளராக நிறுத்துவது என்று நியமனக்குழு முடிவு செய்துள்ளது.

### குமாருக்கு இடமில்லை

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் மகனும், காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவருமான திரு. குமார் பொன்னம்பலத்திற்கு எந்த ஒரு தொகுதி யாவது ஒதுக்கித் தருமாறு காங்கிரஸ் நிர்வாகசபை நியமித்த உப குழு தமிழர் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்துக் கேட்டிருந்தபோதிலும் தமிழ்க் காங்கிரஸார் தமக்குள் ஒருமித்த முடிவுக்கு வரமுடியவில்லையென்றும் இதனால் திரு. குமார் பொன்னம்பலத்தை வேட்பாளராக நியமிக்கமுடியாதுபோய் விட்டதென்றும் நியமனக்குழுவுடன் நெருங்கிய வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

### குமார் போட்டியிடுவார்

தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் திரு. குமார் பொன்னம்பலத்தை ஒரு வேட்பாளராக நியமிக்காதபோதிலும் அவர் பருத்தித்துறைத் தொகுதியில் நிச்சயம் சுயேச்சை வேட்பாளராகக் கேட்பாரென்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிததன.

### ஆலாலும் இறங்கலாம்

திரு. மு. ஆலாலசுந்தரம் நல்லூருக்கு வேட்பாளராக நியமிக்கப்படவேண்டுமென்றுகூட்டணி இளைஞர்கள் வற்புறுத்தி வந்தபோதிலும் அத்தொகுதியில் காங்கிரஸ் - தமிழரசு மோதல் ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு திரு. எம். சிவசிதம்பரம் நியமிக்கப்பட்டுள்ளபோதிலும் இந்த நியமனம்பற்றிய உத்தியோக பூர்வ அறிவித்தல் வெளியானதும் பலர் திரு. ஆலாலசுந்தரத்தின் இல்லத்துக்குச் சென்று நல்லூரிலோ, கோப்பாயிலோ அல்லது முல்லைத்தீவிலோ சுயேச்சையாகவாவது போட்டியிடுமாறு வற்புறுத்தினர். எதற்கும் 'அவசரப்படக் கூடாது' என்று அவர் அவர்களைச் சாந்தப் படுத்தி அனுப்பினர்.

### பிரச்னைகளைச் சமாளிக்க!

நல்லூர்த்தொகுதியில் காங்கிரஸ் - தமிழரசு மோதலைத்

8-ம் பக்கம் பார்க்க)

## ஒரே பார்வையில் கூட்டணி வேட்பாளர்

1. ஊர்காவற்றுறை; பண்டிதர் கா. பொ. இரத்தினம்
2. வட்டுக்கோட்டை திரு. ரி. திருநாவுக்கரசு
3. காங்கேசன்துறை திரு அ. அமிர்தலிங்கம்
4. மானிப்பாய்: திரு. வி. தர்மலிங்கம்
5. உடுப்பிட்டி: திரு. ரி. இராசலிங்கம்
6. பருத்தித்துறை: திரு. க. துரைரத்தினம்
7. கிளிநொச்சி: திரு. வி. ஆனந்தசங்கரி
8. திருமலை: சட்டத்தரணி: இ. சம்பந்தன்
9. மூதூர்: ஜனாப்.எஸ். எம் மக்கீன்.
10. கல்குடா: திரு. சி. சம்பந்தமூர்த்தி
11. மட்டுநகர்: திரு. செ. இராசதுரை
கவிஞர் காசி ஆனந்தன்
(இரட்டை அங்கத்தவர் தொகுதி)
12. மன்னார்: திரு. எஸ். சூசைதாசன்
13. பட்டிருப்பு: திரு.பூ. கணேசலிங்கம்
14. சம்மாந்துறை: ஜனாப் எச் எல். எம். ஹாஷிம்
15. கல்முனை; ஜனாப். மு. சம்சுதீன்
16. புத்தளம்: ஜனாப் ஐ. எம். இலியாஸ்
17. நல்லூர்: திரு. எம். சிவசிதம்பரம்
18. சாவகச்சேரி; திரு. வி. என்.நவரத்தினம்
19. யாழ்ப்பாணம்: வி. யோகேஸ்வரன்
20. பொத்துவில் திரு. எம்.சி. கனகரெட்டினம்
21. வவனியா திரு. ரி. சிவசிதம்பரம்
22. முல்லைத்தீவு- திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு
23. கோப்பாய்- திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை
24. நூரனை- திரு. எஸ். தொண்டமான்
25. கொழும்பு மத்தி- திரு. எம்.எஸ். செல்லச்சாமி
26. சேருவில- நியமனம் ஒதிவைப்பு.

துப்பாக்கிச் சூட்டுக்குபலியான

## மலையக இளைஞனுக்கு அனுதாபம் தெரிவித்துக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 22ம் திகதி காலை 10 மணிக்கு தமிழ் இளைஞர் பேரவையினர் டெவன்தோட்டததில் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுக்கு பலியான சிவனு லட்சுமணனுக்கு அனுதாபம் தெரிவிதது ஊர்வலம் ஒன்றை நடாததுவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தின் முன்பாக

(8-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு செய்திகள்

### தமிழ்நாடுதேர்தல்

சென்னை, மே 15

தமிழ்நாடு சட்டசபைத்தேர் நடைபெறஇன்னும் ஒருமாதம் மட்டுமே உள்ளது. இன்று வரை எந்த அரசியல் கட்சியும் தனது வேட்பாளர் பட்டியலை வெளியிடவில்லை.

### மதுவிலக்கு

புதுடில்லி, மே 15

நாடுமுழுவதும் பூரணமான மதுவிலக்கைக் கொண்டுவர முயற்சிப்போம் என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இன்று பஞ்சாப்பில் நடைபெற்ற நினைவுதினக் கூட்டமொன்றில் கூறினர், இந்த மதுவிலக்கை சட்டரீதியில் அல்லாமல் மக்களே அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் பிரதமர் விருப்பம் தெரிவித்தார்.

### காங்கிரஸ்-கம்யூ

சென்னை, மே 15

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் போட்டியிட காங்கிரஸும் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியும் தேர்தல் உடன்பாட்டை இன்று லக்னெவில் செய்தது. இதேமாதிரி உத்தரப்பிரதேசத்திலும் போட்டியிட தேர்தல் உடன்பாடு செய்துள்ளது.

### உலகயுத்தம்

மாஸ்கோ, மே 15

உலக யுத்தத்துக்கு சீனு தயாராகிவருவதாகவும் உலகநாடுகள் சீனுமீது விழிப்பாகஇருக்க வேண்டும் என்றும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகையான "பிராவ்டா" எழுதியுள்ளது.

### இவ்வாரம் 'திருவிழா'

சென்னை, மே 15

தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலில் போட்டியிடுவோரின் பட்டியல் இவ்வாரம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து கட்சிகளினதும் வேட்பாளர் பட்டியல் இவ்வாரம் வெளியானதும் 'தேர்தல் திருவிழா' ஆரம்பமாகும்.

வாடிக்கையாளர்களுக்கு

அறிவித்தல்

தற்போது எம்மால் கொள்ளப்படும் எலக்ரோ பிளேட்டிங் வேலைகளுக்கு 10% வீத சேவைக் குறைப்புடன் ஏற்கப்படுகின்றது. என்பதை அறியத் தருகின்றோம்.

சிறந்த எலக்ரோ பிளேட்டிங் வேலைகளுக்கு எம்மிடம் அணுகுங்கள்.

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7015 6177

## மணமகள் தேவை

தனியார் வர்த்தக நிலையமொன்றில் பொறுப்பதிகாரியாக தொழில் புரியும் மதுபானம் புகைத்தல் பழக்கமில்லாத மாதம் 750 ரூபா வருமானமுள்ள சைவ வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதான ஒருவருக்கு மணமகள் தேவை. ஏழில் செவ்வாய் தோஷம் உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பரஇல. 6194, C/o'ஈழநாடு', யாழ்ப்பாணம்.
6194

# விலை குறைப்பு

## குகன் ஸ்ருடியோ

### பருத்தித்துறை

| அளவு | பிரதி எண்ணிக்கை | பழைய சலார் | புதிய சலார் |
|---|---|---|---|
| 12''×10'' | 2 | 110-00 | 90-00 |
| கபினற் (4 3/4''×6 1/2'') | 2 | 30-00 | 28-00 |
| போஸ்காட் (3 1/2''×5 1/2'') | 2 | 14-00 | 12-00 |
| பாஸ்போட் (2 1/4''×2'') | 2 | 7-00 | 6-00 |

6195

### மானிப்பாய் பட்டின சபை

# முக்கிய அறிவித்தல்

## ஆதனவரி 1977

1977-ம் ஆண்டுக்கான ஆதனவரி இடாப்பைப் பரிசீலிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் அனுமதிக்கப்படுவர்.

1977-ம் ஆண்டின் 1-ம், 2-ம் கந்தாய வரி செலுத்த 30-9-77 வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது. 3-ம், 4-ம் கந்தாயத்துக்கான பணம் வரி அறிவித்தலில் கண்டுள்ள திகதிக்குள் கட்டப்படவேண்டும்.

வெற்றுக்காணிகள், தோட்டக்காணிகள் உட்பட சில ஆதனங்களின் உரிமையாளர் யார் என்பதை உரிய உரித்தாளர் அதற்கான பத்திரத்தில் மனுச்செய்ய வேண்டும். எவரும் உரிமை கோர முன்வராத ஆதனங்கள் அரச ஆதனங்கள் எனக் கணித்துப் பட்டினசபைக்குப் பாரப்படுத்தப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

கே. கோபாலரத்தினம்,
விசேட ஆணையாளர்,
மானிப்பாய் பட்டினம்.

க. சுப்பிரமணியம்,
செயலாளர்,
மானிப்பாய் பட்டினம்,

விசேட ஆணையாளர் அலுவலகம்,
மானிப்பாய் பட்டினம், மானிப்பாய்,
12-5-77.
6193

### ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. ஈடு/14261
அச்சுவேலி வடக்கு 1. கிட்ணர் கந்தையாவும் மனைவி
2. சிவபாக்கியம்
வழக்காளிகள்

எதிராக

அச்சுவேலி வடக்கு தாமு நாகமணி கைம்பெண்
சின்னத்தங்கம்
எதிராளி

ஈடு/14261-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1977-ம் வருஷம் யூன் மாதம் 7-ந் திகதி (7-6-77) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 10086/- மேலும் இதில் 8000/- ரூபாவுக்கு 7-2-74 தொடக்கம் 11-7-75 வரை வருடமொன்றுக்கு 8% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச் செலவுரூபா 558-12 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோவிற்பற்று அச்சுவேலி வடக்கிறை ''வில்வத்தடி'' நிலப்பரப்பு 5, குளிகள் 16½. இதில் வடக்குப் பக்கமாக அரைவாசி நில. பர. 2, குளி 17¼ கிணறும் கல்வீடும் கடைக் கட்டிடங்களும், பயிர்களும் இதற்கு எல்லை ஆதனங்கள், கிழக்கு றேட்; வடக்கும் மேற்கும் கார்த்திகேசு கைம்பெண் அன்னப்பிள்ளை, தெற்கு பரமு கணபதிப்பிள்ளை. இதடங்கலும். முற்பதிவு யாழ்ப்பாணம் K 246/163.

வி. செ. குட்டிப்பிள்ளை,
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
ஏலவிற்பனவாளர்.

''இராசகிரி'',
613, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
6186

உ

## பெயர்மாற்ற அறிவித்தல்

ஜெனன காலந் தொடக்கம் எனது பதியப்பட்ட பெயர் கதிரிப்பிள்ளை கோபாலகுமரவேள் என்று வழங்கப்பட்டுவந்தது அப்பெயர்இன்று முதல் கதிரிப்பிள்ளை ''சண்முகஜோதி'' எனமாற்றி அமைக்கப்படும் என்பதை இலங்கைக் குடியரசுக்கும் பொதுமக்கட்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

இங்ஙனம்
க. சண்முகஜோதி
நீராவத்தை
கரணவாய்தெற்கு
கரவெட்டி P O
6189

## பிஸ்கால் விற்பனை அறிவித்தல்

வடமாகாணம்
நீதவான் நீதிமன்றம்,
ஊர்காவற்றுறை
வழக்குஇலக்கம்:எம்.எஸ்.4465
கோவிந்தர் நாகையா, கரம்பொன் ஊர்காவற்றுறை.
—வழக்காளி

எதிர்

மாரிமுத்து சோமசுந்தரம், சுருவில், ஊர்காவற்றுறை.

எனக்குக்கிடைத்த நீதிமன்ற அறிவித்தலின் பிரகாரம் 1977ம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி பகல் 10 மணியிலிருந்து இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை குறித்த காணிக்குள் நின்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது. இவ்விற்பனைத்தொகையிலிருந்து1971ம் ஆண்டு பெப்ரவரி 26-ம் திகதிய தீர்வையின்பிரகாரம் வழக்காளிக்கு சேரவேண்டிய 1025/-ம் மேலும் ரூபா 1000/-க்கு27-7-1970 தொடக்கம் 25-2-1971வரை 12% வீத வட்டியும் பின்னர் இருவகையாலும் கூடிய தொகைக்கு 25-2-1971 தொடக்கம் முழுமையாக இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 289/50 விற்பனையிலிருந்து அறவிடப்படும்.

### ஆதனவிபரம்

யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று, காரைதீவுமேற்கிறை (ஆடப்பத்தி கலட்டி) நில. பர. 7 1/2 இதில்மேற்குப் பக்கமாக நில. பர. 3 1/2யும் பனைகள், தென்னைகளும், வீடுகளும் எல்லை கிழக்கு நடராசா பெண் பரமேஸ்வரியின் ஆதனம், வடக்கு சுப்பிரமணியம் சண்முகத்தினதும், ஒழுங்கையும், மேற்கு ஆறுமுகம் வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சோமசுந்தரம் பெண் நாகம்மாவின் ஆதனம் இதடங்கலும். இக்காணியின் வடக்கெல்லையருகே வடக்கு ஒழுங்கையிலிருந்து கிழக்கெல்லைக்காணிக்குப் போக்குவரத்துச் செய்யும் வழிப்பாதை உரித்தும் புறநீங்கலாக இன்னும்இக்காணிக்குள் இருக்கும் தலைவாயிலிலும் அதற்குரியநிலத்திலும் வேலுப்பிள்ளை சிவகுருவுக்கும் பெண் பாறுபதிப்பிள்ளைக்குரிய சீவிய உரித்தும் புறநீங்கலும்.

இவ்வாதனம் காலம்சென்ற 2-ம் எதிராளியான சோமசுந்தரம் பெண் தவமணியின் நன்கொடையாகவுள்ளது.

தா. குலஞானம்
பதிவாளர்
நீதிமன்றம் ஊர்காவற்றுறை.
10-5-77.
6183

## இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம்

# மாணவர் வதிவிடங்கள்

இவ்வளாகத்தின் மாணவர்களுக்கு வதிவிட வசதியை வழங்க விரும்பும் யாழ்ப்பாண வளாகத்தின் (திருநெல்வேலி, வட்டுக்கோட்டை ஆகிய இரு இட வளவுகளினதும்) ஐந்து மைல் சுற்றுடலில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 1977 மே 30-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக என்னை வந்தடைதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை சொந்த முகவரியிட்ட முத்திரையுடன் கூடிய மேலுறையை (9''×4'') அனுப்பிவைப்பதன்மூலம் அல்லது நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பாக அடிப்படையான தளபாடங்களை அளிக்கும் விடுதிகள் விரும்பப்படுகின்றன.

இணைப்பதிவாளர்.
இலங்கைப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாண வளாகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
12-05-1977. 6178

# கேள்வி அறிவித்தல்

### ஒலுமடு பொது நூல்நிலையக் கட்டிடம் கட்டுதல்

1. மேற்படி கட்டிட வேலைக்கு 27-05-1977 வியாழக்கிழமை காலை 9-00 மணி வரை கருநாவல்பற்று தெற்கு கிராமசபைத் தலைவரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கேள்விப்பத்திரங்கள் 26-05-1977 வரை தலைவரால் வழங்கப்படும். கேள்விப்பிணையாக ரூபா 50/-ம். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 10/-ம் சபைக்குச் செலுத்துவதன் மூலம் வழங்கப்படும் பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரப் பணம் மீள வழங்கப்படமாட்டாது.
3. கேள்விப்பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு பிரதி கிராமசபைத் தலைவருக்கும், மறுபிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா அவர்களுக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். ஏனைய விபரங்களை இக்கிராமசபை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

வே. சுந்தசாமி,
தலைவர்,
கருநாவல்பற்று தெற்கு,
கிராமசபை.

ஒலுமடு,
மாங்குளம்,
13-05-1977. 6192

## கைது!

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கையின் பல பொலிஸ் நிலையங்களினால் கொலை, கொள்ளை சம்பவங்கள்தொடர்பாகத் தேடப்பட்டுவந்த இரத்தினம் செல்லக்கிளி நேற்று கரையூரில் சிவிலில் சென்ற 8 பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார். (நெ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முதலாம் குறுக்குத் தெருவில் சிறந்த கட்டிடம் அமைக்கத் தகுந்த காணி மூன்று பரப்பு வேம்படி, மத்திய கல்லூரிகளுக்கும், புகையிரதநிலையம், இலங்கை வங்கி ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கும் அண்மையில் அமைந்துள்ளது. விபரங்களுக்கு: தங்கராஜா, 601, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 387 (கந்தோர் நேரங்களில்) 6196

### வகுப்புகள்

4-3-77-ல் வெளியான வர்த்தமானியின்படி அங்கீகரிக்கப்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியராக விண்ணப்பித்தவர்களுக்கும் விண்ணப்பிக்க இருப்பவர்களுக்கும் மேலதிக அறிவுக்கான பயிற்சி வகுப்புகளும் விரிவுரைகளும் ஜூன் மாதம் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு: பதிவாளர் விஸ்வபாரதி சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
6187

## வழக்கு ஒத்திவைப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு

கல்லூரி அதிபரையும் ஆசிரியரையும் கடமையைச்செய்யவிடாதுதடுத்தாராம் முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர். இது சம்பந்தமான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது,

நெல்லியடி மத்தியமகாவித்தியலயத்தில் முன்னர் அதிபராக இருந்த வி கே. நல்லையாவையும், ஆசிரியர் தங்கராசாவையும் கடமையைச் செய்யவிடாது தடுத்ததாக முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என் பாஸ்கரன்மீது குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டுள்ளது. 'இவ்வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு ஏ கெங்காதரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நான்காவது தடவையாகத திருத்தப்பட்ட பிராதுசமர்ப்பிக்கப்பட்டது. இவ்வழக்கு ஆகஸ்ட் மாதம் 19-ந் திகதி தவணையிடப்பட்டது. எதிரிசார்பில் சட்டத்தரணி வ. மகாலிங்கம் ஆஜராஞர்.

## ஒப்பந்தங்கள்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

(திரு. வீ. நவரத்தினம்)
நீங்கள் இருக்கவில்லை.

(திரு, இராசமாணிக்கம்)
நீங்கள் முழு நேரமும் இல்லை பிரதமந்திரியைக் கேளுங்கள். நான்தான் முழுநேரமும் இருந்தேன். பிரதமரையும் அரசாங்க மந்திரியையும் கேட்டுப் பாருங்கள். நீங்கள் முழு நேரமும் இல்லை.

(திரு. வீ. நவரத்தினம்)
நான் மார்ச் 24-ம் திகதியைப் பற்றிப் பேசுகிறேன் (சபையில் குழப்படி), அதைப் பற்றிப் பார்த்துக்கொள்வோம் நான் உமக்குச் சவால் விடுகிறேன் (சபையில் குழப்பம்)

(உப-சபாநாயகர் அவர்கள்)
அமைதி. தயவுசெய்து பேச்சைத் தொடரவும்.

(திரு. வீ. நவரத்தினம்)
கொண்டு வாருங்கள் அந்த மூலப்பத்திரத்தை.


(திரு. இராசமாணிக்கம்)
எந்தப் பத்திரம்?

(திரு. வீ. நவரத்தினம்)
எனது கையெழுத்திலுள்ள அந்த மூலப் பிரதியை.

(திரு. இராசமாணிக்கம்)
நீர் எழுதிப்போட்டு பொக்கட்டில் போட்டிருப்பீர்,

(உப-சபாநாயகர் அவர்கள்)
அமைதி, தயவுசெய்து குறுக்கிடவேண்டாம், மற்றைய கௌரவ அங்கத்தவர்கள் பின்பு பதிலளித்துப் பேசலாம். இப்போ கௌரவ ஊர்காவற்றுறை அங்கத்தவர் பேசட்டும், குறுக்கிட வேண்டாம்.

(தொடரும்)



கைதடி அநாதை இல்லத்தில் வதியும் பிள்ளைகளுக்கு அரஸ்கோ ஸ்தாபன அதிபர் திரு. இ. அரசரத்தினம் புதிய உடுப்புகளை அன்பளிப்புச் செய்வதையும் அவரின் பக்கத்தில் அவ்வில்லச் செயலாளர் திரு. ஆ. கந்தையா நிற்பதையும் படத்தில் காணலாம்.

# "சுதந்திரக்கட்சியே மீண்டும் பதவிக்கு வரும் இடதுசாரிகளுடன் கூட்டு இல்லை"

— அமைச்சர் செ குமாரசூரியர்

கொழும்பு, ஞாயிறு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமே மீண்டும் பதவிக்கு வரும் என்று தபால் தந்தி விடமைப்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சித் தொகுதியில் சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் தமக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி இடதுசாரிகளுடன் தேர்தல் ஒப்பந்தம் ஏதாவது செய்துகொள்ளுமா என்று கேட்டபோது, இடதுசாரிகளுடன் எதுவித ஒப்பந்தமும் செய்துகொள்ளப்படமாட்டாது என்று உறுதியாகத் தெரிவித்தார்.

தேர்தல் ஒப்பந்தம் செய்வதானல் அதன்மூலம் இருசாராருக்குமே நன்மைகள் ஏற்படவேண்டும். இடதுசாரிகளுடன் இணைவதால் அவர்களுக்கு நன்மை ஏற்படுமோ ஒழிய நமக்கு எதுவித நன்மையும் ஏற்பட்டுவிடமாட்டாது என்றும் திரு. சூரியர் கூறினர். (மு-இ)

## யாழ்ப்பாணத்தில்

## 50 பேருக்கு காணி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் வண்ணர் பண்ணை தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட மூன்றரை ஏக்கர் காணி இப்பகுதியில் உள்ள காணியற்ற ஏழைகளுக்கு குடியிருப்பதற்கு பகிர்ந்து கொடுக்கப்படவிருக்கின்றன.

யாழ்மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. கே. ரி. சம்பந்தர் இக்காணியை பங்கீடு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாண எம்.பி. திரு. கி. எக்ஸ் மாட்டீனின் நடவடிக்கையின் மீது இக் காணிகளை வீடற்ற வறியவர்களுக்கு பங்கிடு செய்ய சுவீகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கொட்டடியில் உள்ள மருதோன்றிக்காடு என்ற காணியே இத்திட்டத்திற்கென சுவீகரிக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு ஒரு பரப்பு வீதம் சுமார் 50 பேருக்கு இக் காணித்துண்டுகள் பங்கிடு செய்யப்படவுள்ளன. (க)

## விமானமூலம் நெல்விதைப்பு

அல்மாஅதா, மே.15

சோவியத் மத்திய ஆசியக் குடியரசான கஸாக்ஸ்தானில் விமானத்திலிருந்து நெல்விதைகளை விதைக்கும் புதிய விவசாய- தொழில்நுட்ப முறை கையாளப்பட்டுள்ளது.

காலவிரயத்தைத் தவிர்ப்பதற்குத் துணை செய்யும் இந்த முறை பரீட்சார்த்த விதைப்புகளின் போது நல்ல பெறுபேறுகளைத் தந்துள்ளதாக சோவியத் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இந்த ஆண்டில் கஸாக்ஸ்தான் குடியரசில் 2,000 ஹெக்டேர்களில் விமானத்திலிருந்தே நெல்விதைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

# கலைஞர் சொன்ன 'முதலிரவு' கதை

சென்னை, மே 16

இந்தியாவில் அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தபோது மிசாகைதிகளைப் பொலிசார் எத்தனை கேவலமாக நடத்தினர் என்பது பற்றி கலைஞர் கருணாநிதி சுவையான கதையொன்றைக் கூறினர்.

அரசியல் கைதிகளை விடுதலைசெய்யக்கோரி அண்மையில் சென்னையில் டாக்டர் விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி சொன்ன கதை இது.

"இந்தியாவில் மிசா கைதியாக்கப்பட்ட திருச்சி தி. மு. க. தொண்டன் சுப்பிரமணியன், திருமணத்திற்கென ஒருநாள் பரோலில் அவாது இல்லத்திற்குச் சென்ருர். கூடச்சென்ற பொலிசார் அன்று இரவு தாங்களும் அவருடன் கூட இருக்கவேண்டுமெனக் கூறினராம்!

பொலிசாரின் இந்த விபரீதமான ஆசையை அவர் மறுக்கவே ஒரு திரைச்சீலையை போட்டுவிட்டு முதலிர்வை கழிக்கும்படி பொலிசார் கூறினராம்! இதனல் மனமுடைந்த அவர் திருமணமே வேண்டாமென்று புறப்பட்டுவிட்டார். எத்தன்மையான கொடுமை நடந்திருக்கிறது பாருங்கள்"

இக் கூட்டத்தில் இந்திய மார்க்சிஸ்ட்கட்சி சார்பில் பி. ராமமூர்த்தியும் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் தா. பாண்டியனும் முன்னள் மத்திய துணைநிதிஅமைச்சர் கே. ஆர். கணேசனும், தி. மு. க. சார்பில் கலைஞர் கருணாநிதியும் பேசினர். (கி)

## "மீண்டும் சிறிமா பதவிக்கு வந்தால்

## கிளிநொச்சிப் பகுதியை மாவலி நீர் வளப்படுத்தும்"

கிளிநொச்சி, ஞாயிறு

'திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அம்மையாரின் மூன்ருவது அரசாங்கத்தில் நிச்சயமாக மகாவலிநீர் இரணைமடுக் குளத்தில் சங்கமித்துக் கிளிநொச்சிப் பிரதேசத்தை வளங்கொழிக்கச் செய்யும்' என்று தபால் அமைச்சரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. செல்லையா குமாரசூரியர் நேறு இங்கு பேசிய வைபவத்தில் உறுதியளித்தார்.

கிளிநொச்சி பஸ் நிலையத்திற்கு அணித்தாக அரை ஏக்கர் வீடமைப்புத்திட்டத்திற்கான நினைவுக்கல்லைத்திரை நீக்கம் செய்து வைத்தபின் இன்சூரன்ஸ் கூட்டுந்தாபனக் கிளையைத திறந்துவைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினர். இக்கூட்டம்வீடமைப்பு ஆணையாளர் தலைமையில் நடை பெற்றது. மேலும்பலர் உரையாற்றினர். (அ)

## போலி நெய்

யாழ்ப்பாணம், திங்கள்

தேங்காயெண்ணை, உருளைக்கிழங்கு ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பெற்ற போலி நெய் போத்தல்களில் அடைக்கப்பட்டு, யாழ்.நகரில் விற்பனைசெய்யப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தேங்காயெண்ணை, உருளைக்கிழங்குடன் சிறிதளவு நெய்யும் கலந்து தயாரிக்கப்பட்ட இப்போலி நெய், வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கு விற்பனை செய்யப்படுகிறதாம்.

இப்போலி நெய் பலவித நோய்களை உண்டாக்குமாதலால் எச்சரிக்கையாக இருக்குமாறு யாழ். மாநரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ)

## தேர்தல்நிதி: தி.மு.க.வின் புது இயக்கம்

சென்னை, மே 15

காலணிகளைப் பொலிஷ் செய்து தேர்தல் நிதி வசூலிக்கும் இயக்கமொன்று நேற்று சென்னை தி.மு.க. தொண்டர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரயில்நிலையத்திற்கு முன்பாக மு.க.அழகிரிசாமி தலைமையில் இவ் இயக்கம் ஆரம்பமானது.

பல தி.மு.க. இளைஞர்கள் இதில் கலந்துகொண்டனர். (கி)

## "மக்கள்தான் கோவிலைக் கட்ட வேண்டும்" - யாழ். மேற்றிராணியார்

உடுப்பிட்டி, ஞாயிறு

"நமது நாட்டில் உள்ள மேற்றிராசனங்கள் முன்னர் போல் இன்று பொருளாதார நிலையில் இல்லை. எனவே பிறரை எதிர்பார்க்காது நாமே தேவாலயங்களைக் கட்டி எழுப்பவேண்டும்"

இவ்வாறு யாழ். மேற்றிராணியார் அதி. வந். பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கத்தோலிக்க மக்களைக் கேட்டுக்கொண்டார்.

ஜெயந்தி நகருக்கு விஜயம் செய்த மேற்றிராணியாருக்கு அப் பகுதி கத்தோலிக்க மக்களால் வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது மேற்றிராணியாரிடம் ஜெயந்திநகர் கத்தோலிக்க மக்கள் தமக்கு ஒரு தேவாலயம் கட்டித்தரும்படி வேண்டுகோள் விடுத்தனர். இதற்குப் பதிலளிக்கையிலேயே ஆயர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதிவந். ஆயர் தமதுரையில் மேலும் கூறியதாவது:

முன்பு ஐரோப்பியர்கள் தமது நாட்டுப் பணத்தையும், பொருட்களையும் தந்து இங்கு கோவில்கள், கல்லூரிகள் முதலியனவற்றை நிறுவி எம் நாட்டவருக்கு உதவிபுரிந்தனர். இன்று நம் நாட்டில் உள்ள தேவாலயங்களும், தற்போது எமக்குச் சொந்தமாகவுள்ள கட்டிடங்களும் அவர்களாலேயே கட்டிஎழுப்பப்பட்டன. ஆனல் இன்று அவைபோன்ற கட்டிடங்களை நாமே நிறுவவேண்டியிருக்கின்ருேம். எமது நாட்டிலுள்ள மேற்றிராசனங்கள் முன்னையைப்போல் பொருளாதார நிலையில் இல்லை. நாமே பணத்தைச் சேர்த்துக் கோவில்களைக் கட்டவேண்டும். இதற்காகப் பிறரை எதிர்பார்க்கக்கூடாது. சிறிது சிறிதாக நிதியை வசூலித்து ஒரு அளவான சிறிய தேவாலயத்தை அமைக்கலாம். இதற்கு மேற்றிராசனமும் குறைந்தளவு உதவிசெய்யும். 35 வருடகாலமாகக் கட்டப்பட்டுவரும் யாழ் மேற்றிராசனக்கோயில் வேலைகள் இன்னும் முடிவுருமல் இருப்பது மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்றல்ல" என்று ஆயர் கூறிமுடித்தார்.

வணபிதா எஸ். ஜே.இராஜநாயகம் தலைமையில் இவ் வரவேற்பு அளிக்கப்பட்டது. திரு. ஜோன் நன்றி கூறினர்.

## பரீட்சை ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், திங்கள்

வெளிவாரி, உள்வாரி வர்த்தகப்பட்டப்படிப்பு மாணவர்களுக்கான பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெளிவாரி, உள்வாரி வர்த்தகப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான முதல்வருடப் பரீட்சை இன்று 16ம் திகதி நடைபெறவிருந்தது. வித்தியோதயவளாக விரிவுரையாளர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்துள்ளதால் இப்பட்ரீசை காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வெளிவாரி, உள்வாரி மாணவர்களின் பரீட்சை ஒரே மண்டபத்தில் நடைபெறவிருந்ததால் இருவாரி மாணவர்களின் பரீட்சையும் தடைப்பட்டுள்ளது. இதுபற்றி மாணவர்கள் வளாகத் தலைவரிடம் கேட்கப்பட்டபோது பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்று கூறியுள்ளார். (கு)

## சித்திலெப்பை நினைவுதினம்

யாழ்ப்பாணம்,திங்கள்

மறைந்த முஸ்லிம் தலைவர் சித்திலெப்பைக்குஜூன் மாதம் 10-ந் திகதி முத்திரை வெளியிட்டு தபால் அமைச்சு கௌரவிக்க விருக்கிறது.

முன்னர் உறுதியளித்ததன் பேரில், தபால், கட்டட நிர்மாண அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார், இவ்வைபவத்தை இங்கு கோலாகலமாக கொண்டாடுவதற்கு யாழ். முஸ்லிம் சங்கங்கள் ஏற்பாடுகளை செய்துவருகின்றன. (கெ)

## கிராம சேவையாளர் ஓட்டப் போட்டி

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரியால் நடாத்தப்பெற்ற 10-வது ஆண்டு நிறைவு விளையாட்டுப் போட்டியில் கிராம சேவையாளர் ஓட்டப்போட்டியும் நடைபெற்றது. பார்வையாளர்களை மிகவும் கவர்ந்துகொண்ட இப்போட்டில் சங்கானை மேற்கைச் சேர்ந்த கே.தர்மலிங்கம் முதலாவது இடத்தையும் மூளாய் பிரிவைச்சேர்ந்த ச. கந்தசாமி 2-வது இடத்தையும், வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த ஆ. முருகேசு 3-வது இடத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

## ஜெ. பி.க்கு சிகிச்சை முடிந்தது

வாஷிங்டன், மே. 15

அமெரிக்காவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவரும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் நாளை திங்கட்கிழமை மருத்துவமனையை விட்டு வெளியேறுவார்.

சத்திரசிகிச்சையின்பின் அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுவருவதையடுத்து டாக்டர்கள் மருத்துவமனையைவிட்டு அவர் வெளியேற அனுமதி வழங்கியுள்ளனர். [உ]

**மணிவாக்கு**

தூய்மையைத் தூய்மையின்மைக்கெதிரில் வைத்துப் பார்க்கும்போதுதான் அது சோதனைக்குள்ளாகிறது.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# புட்டோவின் யோசனை

பாகிஸ்தானின் பிரதம மந்திரியாக தாம் தொடர்ந்தும் இருக்கலாமா இல்லையா என்பதைப் பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி புட்டோ அறிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானில் கடந்த 2 மாதங்களாக நடந்துவரும் கலவரங்கள் பற்றிய செய்திகள் அமைதியை விரும்பும் மக்களுக்கு மகிழ்ச்சியளிக்க முடியாது.

ஆட்சிமன்ற ஜனநாயக முறையை மீண்டும் பாகிஸ்தானில் ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஆட்சிமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தினார் ஜனாப் புட்டோ.

எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்து ஜனாப் புட்டோவின் கட்சிக்கு எதிராகப் போட்டியிட்டன

தேர்தலில் எதிர்க்கட்சிகள் படுதோல்வி அடைந்தன. ஜனாப் புட்டோவின் கட்சி அமோக வெற்றியீட்டி ஆட்சிபீடத்திற்கு வந்தது.

தேர்தலில் மோசடி நடந்திருப்பதாக எதிர்க்கட்சியினர் குரல் எழுப்பினர். மீண்டும் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் ஒரு பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

புதிதாகத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்தன; கைகலப்புக்கள், கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச் சூடு என்று பல சம்பவங்கள், உயிர்ப் பலியும் இடம்பெற்றது. சிறைகளும் நிரம்பின. எதிர்க்கட்சித் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடத்துவதற்கு புட்டோ இன்னமும் ஒப்புக்கொள்ளவில்லை.

ஒரு பொதுத் தேர்தல் நடந்து முடிந்த சில மாதங்களுக்குள்ளேயே மீண்டும் பொதுத் தேர்தல் நடத்துவதென்பது சுலபமல்ல.

வீண் செலவுகளும் வீண் பிரச்னைகளும் ஏற்படுமென்பது உண்மையே. ஜனாப் புட்டோ அஞ்சுவதுபோல் அந்நிய சக்திகளின் தலையீடும் ஏற்படலாம்.

என்றாலும் பல்லாண்டுகள் தேர்தலே நடக்காமல் சர்வாதிகார ஆட்சி நிலவிய ஒரு நாட்டில் பொதுத் தேர்தலை நடத்த முன்வந்தபோது அது எவ்வளவுக்கு நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடைபெறவேண்டுமென்பதை எதிர்க்கட்சியினரும் ஆரம்பத்திலேயே விழிப்பாயிருந்து ஆட்சிபீடத்தில் உள்ளவர்களுக்கு இடித்துக் கூறியிருக்கவேண்டும்.

இந்தியாவில் மிகக்குறுகிய காலத்தில் தேர்தல் அறிவிப்பு வந்த போதிலும் எதிர்க்கட்சியினர் விழிப்பாயிருந்தன; அரசும் நேர்மையான முறையில் தேர்தலைப் நடத்தி மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டது.

மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை நடத்தாமல் தாம் தொடர்ந்தும் பிரதமராக இருப்பதை மக்கள் விரும்புகிறார்களா என்பதை சர்வ ஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்கு ஜனாப் பூட்டோ தீர்மானித்திருப்பதைவரவேற்கலாம்,

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர்களையும் மற்றும் பலரையும் சிறை வைத்துக்கொண்டு ஜனாப்பூட்டோ இந்த வாக்கெடுப்பை நடத்தமாட்டாரென்றே எதிர்பார்க்கலாம்.

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் இலங்கை உட்பட ஜனநாயக ஆட்சி அமைப்பைபின், மற்றும் நாடுகளுக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும்.

நமது நாட்டில் குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியிலுள்ள கட்சிகள் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் களைக்கூட அமெரிக்காவில் போல் பூர்வாங்க வாக்கெடுப்பு நடத்திமுடிவு செய்யாதிருந்தால் பிரச்னைகள் குறைந்திருக்கும் என்று நம்பலாம்.

## ‘எமது கலைகள் வளர உழையுங்கள்’

யாழ்ப்பாணம், திங்கள்

“‘இந்து சமயம் நமது பாரம்பரியமான கலைகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. இன்று பரதநாட்டியம் உலகில் வாழும் எந்த இனத்தவரும் போற்றும் கலையாக முதன்மை பெற்றுள்ளது’’ என்று சனிக்கிழமை இரவு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற செல்வி. ஷாமினி சவுந்தரநாயகத்தின் பரதநாட்டிய அரங்கேற்ற வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். வளாக புவியியல் பேராசிரியர் திரு. ஊாதர் ஜெயசிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ‘‘ஏழாலை என்பது ஏழு ஆலயங்களைக் கொண்ட ஊராக இருந்தாலும் அங்கு கிறிஸ்தவ ஆலயங்களும் உண்டு. இங்கு வாழும் மக்கள் கலையார்வம் மிக்கவர்கள். எமது பாரம்பரியத்தை போற்றும் இனத்தவர்கள். இந்தச் செல்வியும் ஏழாலையைச் சேர்ந்தவர். இங்கு சைவம் வளர்ந்துள்ளது. கலையார்வமும் மிளிர்ந்துள்ளது. இந்தச் செல்வியின் அரங்கேற்றமே நம் அனைவரையும் கலையார்வம்கொள்ளச் செய்கிறது. சுருங்கச் சொன்னால் நம் நாட்டில் வருங்காலத்தில் பழமையைப் போற்ற இராமநாதன் கல்லூரியின் நுண்கலைப் பிரிவு நன்றாகச் சேவையாற்றுகின்றது. எம்கலைகள் சிறப்ற ஒவ்வொருவரும் கலையை வளர்க்க முன்வரவேண்டும்’’ என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து இசைக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு விருதளிக்கப்பட்டது. (கெ)

## வங்கிக்கிளைகள்

யாழ்ப்பாணம், திங்கள்

மக்கள் வங்கிக்கிளைகள், நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை ஆகிய பகுதிகளிலும் கிராமியவங்கி அனலைதீவிலும் விரைவில் திறக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை தேசிய அரசு பேரவை உறுப்பினர், பண்டிதர் கா. பொ. இரத்தினம் எடுத்துள்ளார். (கெ)

# ‘தமிழ் ஈழம் மலரவைப்பதே தந்தைக்கு நாம்செய்யும் கைமாறு’’

கோண்டாவில், ஞாயிறு

தந்தை செல்வா தமிழினத்தின் நலனுக்காகவும் அதன்விடிவுக்காகவும் சமஷ்டி சமஉரிமைக் கொள்கை ஒன்றை உருவாக்கி, அதற்காக நாளும் பொழுதும் மேடைகளில் பிரச்சாரம்செய்து, தமிழினத்தை இந்தநாட்டில் ஓர் உயர்ந்த இனமாக உருவாக்க செயற்பட்டுவரும் வேளையில் அதனைக் கண்டு சிலர் ஏளனம்செய்தார்கள். செல்வாவிற்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்றும்குறை கூறினார்கள். தந்தை ஓர் பிரிவினைவாதி என்றார்கள். இப்படிப் பல்லாயிரம் பேர் தூற்றியபோதிலும் தந்தைசெல்வா அவற்றைக்கண்டு சலித்துவிடாமல், மனம்களைத்துவிடாமல், நாளும் பொழுதும் பேச்சினிலும் மூச்சினிலும் தாம் எடுத்துக்கொண்ட கொள்கையைச் சாதிக்கும் மனத்தைரியத்தோடு செயல்பட்டார். செல்வாவைத் தூற்றிய அவ்வளவுபேரும், பைத்தியகாரர்களாக்கப்பட்டார்கள்! மூதறிஞர் செல்வா உலகம்போற்றும் உயரிய தந்தையானார்’

இவ்வாறு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் திரு. தம்பி ஆனந்தன் தலைமையில், மறைந்த தந்தைசெல்வா அஞ்சலிக் கூட்டத்தில் சட்டத்தரணி திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர்கள் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்தனர்.

‘தந்தை செல்வா, சமஷ்டி முறையில், உரிமை பெறமுடியாது, அப்படியான சமஷ்டி ஆட்சிமுறை வந்தாலும் தமிழன் தலைநிமிர்ந்து இந்நாட்டில் ஓர் தனிச்சுதந்திர மனிதனாக உலாவமுடியாது என்பதை திடமாகக் கண்டிருந்தார். இதனால்தான் தமது இறுதிக்கால கட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களையாவது பிரித்துதன்மானத் தனிநாடு தமிழ் ஈழமாக மலர வேண்டும் என்று ஆசைப்பட்டார், செயற்பட்டார் இந்த அடிமைத் தமிழினத்தின் விடிவுக்காக தந்தையின் சிந்தனைத் துளிகளாக வழிந்தோடிய தன் மானம், தனிநாடு, தமிழ்ஈழம் என்ற தாரக மந்திரத்தினால் தான் யாழ்ப்பாணத்தான், திருமலையான், மட்டக்களப்பான், மலையகத்தான் என்று பிரிந்து இருந்த தமிழர்கள் எல்லாம் தந்தையின்கொள்கையை அந்த புனிதமானமந்திரத்தைக் கேட்டு ஒன்றுபட்டு தந்தை வகுத்த பாதையிலே போராடி வருகின்றார்கள் எமது துர் அதிர்ஷ்டம் தமிழ்ஈழம் மலரும் கடைசிக் காலகட்டத்தில், உலகத் தமிழர்போற்றும் எங்கள் உத்தமத்தந்தை செல்வா மறைந்துவிட்டார். ஆனாலும் அவர் மறைந்தபோதிலும் அவர் சிந்திய இலட்சியங்களை மறந்துவிடாமல் அவர் வகுத்துத்தந்த அதேபாதையில் சென்று தமிழ்ஈழம் மலரவைப்பதே நாம் அவருக்குச்செய்யும் இறுதிஅஞ்சலியாகும்’ என்றார்.

திரு. பொன். சத்தியசீலன் உரையாற்றுகையில், ‘தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணா வளர்த்த திராவிட முன்னேற்றக் கழகம் இன்று சிதறி சின்னா பின்னப்பட்டு பல கோணங்களிலும் பிரிந்துகிடப்பதற்கு காரணம் மறைந்த அறிஞர்அண்ணா தமக்கென்று ஓர் வாரிசை தெரிவுசெய்து கழகத்தின் கையில் ஒப்படைக்காமல் மறைந்துவிட்டதே. ஆனால் தந்தை செல்வாவோ தமக்குப் பின் தமது வாரிசாக தமது கொள்கைகளையும் இலட்சியங்களையும் சரிவரக்கட்டிக்காத்து செயலாற்றக்கூடிய தானைத் தலைவன் தளபதி அமிர்தலிங்கதை நம்மிடம் தந்துவிட்டுச் சென்றுள்ளார்.

எனவே தந்தையின் பேச்சுக்கும் மூச்சுக்கும் எவ்வளவு மதிப்புக்கொடுத்தோமோ, தந்தை இட்ட கட்டளைகளை எப்படி நிறைவேற்றினோமோ அதே போல அண்ணன் ‘அமிர்’ சொல்வதை ஏற்று, அவர் தலைமையின்கீழ் போராடி தந்தையின் கனவை நனவாக்குவதே நாம் தந்தைக்கு செலுதத வேண்டிய இறுதி அஞ்சலியாகும்?’ என்றுகூறினார். வண்ணை ஆனந்தன் உட்பட கூட்டணிப் பிரமுகர்கள் பலரும் உரையாற்றினார்கள்.



# செல்வி வானதியின் அரங்கேற்றம்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் தலைமையில் சதங்கை நர்தனாலய மாணவி, திருமதி ஆறுமுகையாவின் சிஷ்யை, செல்வி வானதி இலங்கேஸ்வரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் நடைபெற்றது. பின்னணியில் திருமதி ஞானகுலேந்திரனும் செல்வி யோகேஸ்வரி சுரேந்திரனும் பாடினர்; திரு. கே. சபாரத்தினம் வயலின் வாசிக, செல்வன் ரவீந்திரன் தர்மராஜா கச்சிதமாக மிருதங்கம் வாசித்தார். தில்லானாவுக்கும் மயில் நடனத்துக்கும் கண்ணன் கோஷ்டியினரின் நாதஸ்வர இசையும் இடம்பெற்றது.

### நாட்டிய விமரிசனம்

சுத்த பரத உருப்படிகள் ஆறும் ஜனரஞ்சகஉருப்படிகள் மூன்றுமாக மொத்தம் ஒன்பது உருப்படிகளை சுமார் இரண்டேகால் மணிநேரத்தில் ஆடிமுடித்தமை அலுப்புத்தட்டாமலிருந்தது. கடைசி மூன்று உருப்படிகளுக்கும் ஒப்பனை மாற்றம் தேவைப் பட்டும் காலதாமதமின்றி ‘விடு விடு’என்று நிகழ்ச்சிகள் இடம் பெற்றமை பாராட்டுக்குரியது

நல்ல உடற்கட்டும் துரிதமும் நிறைந்த செல்வி வானதியின் அலாரிப்புடனேயே கச்சேரிகளை கட்டிவிட்டது. ‘சகியே இந்தவேளையில் ஜாலம் செய்யாதே’ என்ற ஆனந்த பைரவிராக வர்ணத்தின் போதுதான் அதற்குமுன்னர்சற்று விறைப்பாககாணப்பட்ட வானதி, தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் ஆடினார்.

சிகர நிகழ்ச்சியான வர்ணத்தைத் தொடர்ந்து முத்தாய்ப்பு நிகழ்ச்சியான தில்லானா இடம் பெற்றபின் ‘குனித்த புருவமும்’ என்ற பதம் தொய்வாகக் காணப்பட்டது. நாதஸ்வர இசையைச் தொடர்ந்து வாய்ப்பாட்டு எடுபடுவது கஷ்டம் என்பதையும் அவதானிக்கக் கூடியதாயிருந்தது. ஆயினும் வானதியின் அபிநயக் கவர்ச்சி இக்குறைபாட்டுக்கு ஈடு செய்தது.

தன் கைத்தலம் பற்றிய கண்ணனைப்பற்றிய கனவை தாய்க்கு எடுத்துரைப்பதாய மைந்த மீராபஜன் வானதியின் கற்பனை வளத்துக்கு நிறைய இடமளித்து அவருடைய அபிநயத்திறனுக்கு நிறைய சந்தர்ப்பமளித்தது.

குறத்தி நடனத்துக்கு ஒப்பனை மென்நிறங்களில் அமைந்திருந்தது பொருத்தமாயிருக்கவில்லை நகையும் உடையும் இப்படித்தானிருக்கும் என்று பழக்கப்பட்டுப்போன ரசிகர்களுக்கு இது ஒரு (ஏ)மாற்றமாயிருந்தது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

திருமதி லீலா ஆறுமுகையாவின் நட்டுவாங்கப்புலமை ஒருபுறமிருக்க தில்லானாவின் போது நாதஸ்வரத்தின் பின் மனிதக்குரல் மங்கி ஒலித்ததை அவதானிக்காமலிருந்திருக்க முடியாது’ நாதஸ்வர இசையுடனமைந்த நிகழ்ச்சிகளை கடைசியில்மைப்பதே சிறந்தது.

நிருத்தமும் அபிநயமும் நன்கு கைவரப் பெற்ற வானதிக்கு நடன அரங்கில் நல்ல வரவேற்பிருக்கும் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை.

மணி

## படகுசேவை பாதிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

சேவையிலீடுபடுத்தப்படும் அரசாங்க படகுகளான குமுதினி சாந்தினி திடீரெனப் பழுதடைந்துவிட்டதால், நெடுந்தீவு பிரயாணிகள் மிகவும்கஷ்டத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தீவிப்பகுதி எம். பி: யிடம் கோரப்பட்டுள்ளது. (கெ)

## துப்பாக்கி மீட்பு

கலகெதர, ஞாயிறு

பதினாறு தடவைகள் சுடக்கூடிய துப்பாக்கி ஒன்றினை கலகெதர பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இத்துப்பாக்கியின் உரிமையாளர் யார் என்பதனை அறிவதில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். (உ)

# ஒப்பந்தங்கள், உறுதி மொழிகளினால் தமிழினத்தைக் காப்பாற்ற முடியாது

வ. நவரத்தினம்
தலைவர், சுயாட்சிக்கழகம்

கடைசியாக, இப்பொழுது யூ. என். பி.க்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்திற்கும் வருவோம். தேர்தல் முடிந்ததும், 1965 மார்ச்சு 24ம் திகதி கொழும்புக்கு வந்தோம். என்னைப் பொறுத்தவரையில் சொல்லுகிறேன், அதற்கு முன் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சி சார்பில் சிலருக்குமிடையில் முன்னோடியாக ஆரம்பப் பேச்சுவார்த்தை ஏதோ கொழும்பிலே நடந்தது பற்றி எனக்குத் தெரியாது. பின்புதான் அறிந்தேன். யாரோ சிலர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் திரு. திருச்செல்வத்தோடு தொடர்பு கொண்டார்களென்றும் அவர்களின் வேண்டுகோளின்படி திரு. திருச்செல்வம் யாழ்ப்பாணம் போனாரென்றும் அங்கே தமிழரசுக்கட்சியினரைச் சந்தித்து யூ. என். பி. அரசாங்கம் அமைப்பதற்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவு தேவைப்படுமானால் என்ன நிபந்தனையில் அந்த ஆதரவு கொடுக்கப்படும் என்பது பற்றிக் கேட்டறிந்துவந்தாரென்றும் இதையெல்லாம் பின்புதான் நான் அறிந்தேன். அப்பொழுது நான் கடல் கடந்த ஏதாவது தீவு ஒன்றில் நின்றிருக்க வேண்டும். ஆனால் உண்மையில் வேண்டுமென்றே நான் அறியாதவாறு இரகசியமாக வைத்திருக்கப்பட்டது என்று தெரியவந்தது. ஏனெனில் பிரச்னைகள் பலவற்றில் நான் கொண்டுள்ள கருத்துக்களை திரு. திருச்செல்வமும் மற்றும் கட்சியினரும் நன்றாக அறிவார்கள். அதனால் எனக்கு மறைக்கப்பட்டிருந்தது. கொழும்புக்குப் புறப்படுகிற தருணத்தில் மாத்திரம் தெரியவந்தது. பிரதமரைச் சந்திக்கப்போகிறோம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதற்குப் பேச்சுவார்த்தை நடக்கப் போகிறது என்றும்.

இன்னுமொன்றையும் சொல்ல விரும்புகிறேன், கௌரவ திருச்செல்வம் 'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு ஒரு பேட்டியளித்திருக்கிறார். அந்தப் பேட்டி 8-6-1968 பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றது. அந்தப் பேட்டியில்தான் முதன்முறையாக ஒரு விஷயத்தைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். இதுவும் அப்பொழுது எனக்குத் தெரியாமலிருந்த விஷயம். அப்பொழுது யூ. என். பி. ஒன்றுதான் நம்மோடு இணங்குவதற்கு முன்வந்துள்ளது என்றுதான் திருச்செல்வம் சொல்லியிருந்தார். அதனால்தான் அந்தக் கட்சியோடு பேசுவதற்கு தமிழரசுக்கட்சி சம்மதித்தது. இணைப்புக் கட்சியினரோடு (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சமசமாஜக்கட்சி இணைப்பு)த் தான் தொடர்புகொண்டதாகச் சொன்னாரேயன்றி, தான் என்ன கேட்டது, அவர்கள் என்ன தரச் சம்மதித்தார்கள் என்பது பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை. இப்பொழுது இந்த 8-6-68 'டெயிலி நியூஸ்' பத்திரிகைப் பேட்டியில்தான் முதன்முறையாக வெளியிடுகிறார். அந்த மார்ச் 23ந் திகதி முழு நாளும் 24ந் திகதி காலையிலும் என்னென்ன நிகழ்ந்தன என்று பேட்டியில் இப்படிச் சொல்லுகிறார்:

''தனக்கும் இணைப்புக் கட்சியினருக்குமிடையில் நிகழ்ந்த சந்திப்பு பிற்பகல் 1-00 மணியளவில் நடந்தது. திரு. டி. பி. இலங்கரத்ன, திரு. கலுகல்ல, திரு. மைத்திரிபால சேனநாயக்கா, ஜனாப் பதியுதீன் மஹ்மூத் ஆகிய நால்வரும் சமுகமளித்திருந்தனர். இந்த நால்வரும் திருமதி பண்டாரநாயக்கா சார்பில் வந்தவர்கள். உண்மையில் அவரால் அனுப்பப்பட்டவர்கள்.''

''திரு. இலங்கரத்ன இந்தக் கோஷ்டிக்குப் பேச்சாளராகக் காணப்பட்டார். அரசாங்கம் அமைப்பதற்குத் தமிழரசுக்கட்சியின் உதவியை விரும்புவதாகக் கூறினர். என்ன நிபந்தனைகளின் பேரில் எங்கள் உதவி கிடைக்கும் என்றும் கேட்டார்.''

''நான் சொன்னேன், பண்டாரநாயக்க–செல்வநாயகம் 'ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டும், அதற்குக் கூடவும்வேண்டாம், குறையவும் முடியாது என்றேன்.''

இப்போதுதான் முக்கியமான கட்டம் வருகிறது:

''திரு. இலங்கரத்னவும் மற்றைய மூவரும் இதற்கு மறுப்பொன்றும் தெரிவிக்கவில்லை''

இந்தப் பேட்டியை நான் வாசித்தபொழுது பிரமித்துப் போனேன். முழுவதும் எனக்குப் புதினமாக இருந்தது. அன்று இவர் என்ன கேட்டாரென்றோ, இணைப்புக் கட்சியினர் என்ன தருவதற்கு ஆயத்தமாக இருந்தார்கள் என்றோ ஒன்றுமே தெரியாது. தெரிந்திருந்தால் தமிழரசுக் கட்சிச் செயற்குழுவின் தீர்மானம் எப்படிப் போயிருக்குமென்று சொல்லமுடியாது. எனக்குத் தெரிந்தளவில் அனேகமாக ப-செ ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதையே ஏற்றுக்கொள்வதென்று முடிவு கட்டியிருப்பார்களென்று சொல்லலாம். ஆனால் கேள்வி என்னவென்றால் இதை ஏன் எங்களுக்குச் சொல்லாமல் ஒளித்துவைத்திருந்தார் என்பதுதான்விளங்கவில்லை. வடக்கு-கிழக்கு மாகாண மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுக்கு மறைத்து வைத்திருக்கிறார்.

(திரு. எஸ். எம். இராசமாணிக்கம்-பட்டிருப்பு)

நாங்கள் மறுமொழி சொல்லுகிறோம்.

(திரு. வீ. நவரத்தினம்)

திருமதி பண்டாரநாயக்காவை திரு. திருச்செல்வம் சந்தித்ததைப் பற்றிக் கௌரவ கொலன்னாவை அங்கத்தவர் என்னவோ பேசியிருக்கிறார், எனக்கு எல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

## யூ என் பியுடன் செய்த ஒப்பந்தம்

ப-செ. ஒப்பந்தத்திலும் பார்க்க இப்பொழுது யூ. என். பியுடன் செய்த ஒப்பந்தம் எவ்வளவோ குறைவானது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் யாருக்கும் விளங்கும், கௌரவ பிரதமரே அதை ஒத்துக்கொண்டார்.

கௌரவ அரசாங்க மந்திரியவர்கள் (திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன) யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபொழுது பல இடங்களில் சொன்னார், ''சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது'' என்று அதன் கருத்து என்னவென்றால் சுதந்திரக் கட்சிதானே முந்தி ப-செ ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தது அந்த அனுபவத்தின் பின்பு அவர்களின் சொல்லைத் தமிழரசுக் கட்சி மீண்டும் நம்புமா? என்ற கருத்தில் பேசினார். தமிழரசுக்கட்சி மீண்டும் நம்பியிருக்குமா இல்லையா என்று யாரும் திட்டமாகச் சொல்ல முடியாது. திரு. பண்டாரநாயக்க ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்திருக்கலாம். ஆனால் தந்த வாக்குறுதிகளில் சிலவற்றைக் காப்பாற்றி வந்திருக்கிறார். ஒன்பது வருஷங்களாக வடக்கு – கிழக்கு மாகாணங்களிலே சிங்களக் குடியேற்றங்களைச் செய்யாமல் தந்த வாக்குறுதியைக் காப்பாற்றி வந்திருக்கிறார், அதை மறுக்க முடியாது.

அரசியல் கட்சிகள் மேடைகளில் நின்று பலவற்றைப் பேசலாம், அதல்ல முக்கியம். ஒரு காலத்தில் திரு. பண்டாரநாயக்க ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தபோதிலும் அதே ஒப்பந்தத்தை இப்பொழுது அமுல் நடத்தித் தருகிறோம் என்று திரு. இலங்கரத்ன குழுவினர் திரு. திருச்செல்வத்துக்குக் கூறியதை இவர் கட்சிச் செயற்குழுவுக்குத் தெரிவித்திருந்தால் அது வேறு விதமாக முடிவு கட்டியிருக்கக் கூடும் என்று நான் நினைக்கிறேன்.

இவ்வளவு தூரம் கடந்த கால ஒப்பந்தங்களை ஏன் ஆராய்ந்து வந்தேன் என்று நீங்கள் நினைக்கலாம். எனது நோக்கம் என்னவென்றால், இனங்களுக்கிடையே அரசியல் கட்சிகளுக்கிடையே ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் சமரச ஒழுங்குகளும் பரஸ்பர நல்லெண்ண உறுதிமொழிகளும் செய்வதனால் தமிழினத்தைக் காப்பாற்றமுடியாது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான். ஒவ்வொன்றும் நிராகரிக்கப்பட்டே வந்துள்ளன, ஒப்பந்தங்களை நம்பிப் பிரயோசனமில்லை.

ஏன், இப்போதைய ஒப்பந்தத்தை எடுத்துக்கொள்வோமே, நான் முன்கூறியது போல, அதை அமுல்நடத்துகிறோம் என்று பாசாங்கு செய்கிறார்கள். அந்த ஒப்பந்தத்திலுள்ள மொழிபற்றிய ஷரத்தை எடுத்துக்கொள்வோம்,

### விவாத மேடை

1966 ஜனவரி 8இல் நிறைவேற்றிய உபவிதிகள் அந்த ஷரத்தை நேர்மையாகவும் கண்ணியமாகவும் அமுல்நடத்துவது என்று கூறமுடியுமா? இல்லை என்றுதான் நான் சொல்லுகிறேன்.

ஒப்பந்தத்தில் தமிழ்மொழி பற்றிக் கூறுவதாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியே நிர்வாக மொழியும் பதிவேட்டுமொழியும் ஆகுமென்று செய்வதற்கு தமிழ்மொழி (விசேஷவிதிகள்) சட்டத்தின்கீழ்விரைவிலே நடிவடிக்கை எடுக்கப்படும். அன்றியும், இலங்கை முழுவதிலுமே தமிழ்பேசும் மக்கள் தமிழிலேயே அரசாங்கத்துடன் கருமங்களைச் செய்வதற்கு உரிமை உள்ளவராவார்கள் என்பதே தனது கட்சியின் கொள்கையாகும் என்று திரு. சேனநாயக்கா விளக்கம் கூறினார்.'

இப்படித்தான் யூ. என். பி. யுடன் நாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் உள்ளது. (கௌரவ அங்கத்தவர் ஒருவர்)

எப்பொழுது?

(திரு. வீ. நவரத்தினம்)

## உபவிதிகள்கூட அமுலாகவில்லை

1965 மார்ச்சு 24 நள்ளிரவு டாக்டர் எம். வி. பி. பீரிஸ் வீட்டில்வைத்து, தமிழும் என்றில்லை, தமிழ்தான் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாகமொழி என்றுதான் இருக்கிறது.

இந்தச் சபையிலே நிறைவேற்றப்பட்ட உப விதிகள் ஒப்பந்தப்படிதானா இருக்கின்றன? இல்லவே இல்லை, எவ்வளவோ வித்தியாசம், ஒப்பந்தப்படி நமக்குக் கிடைத்தது ஒன்றுமில்லை. உப – விதிகள் கூட அமுல் நடத்தப்பட்டனவா? அதுவுமில்லை.

அரசாங்க ஊழியர் விஷயத்தை எடுத்துக்கொள்வோம். யூ. என். பியோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் அதுவும் ஓர் முக்கியமான விஷயம்.

(கௌரவ டட்லி சேனநாயக்க)

அரசாங்க ஊழியரா?

(திரு. வீ. நவரத்தினம்)

ஆம், அரசாங்க ஊழியர்.

(கௌரவ டட்லி சேனநாயக்கா).

எங்கே?

(திரு. வீ. நவரத்தினம்).

நான் விளக்கிக் கூறுகிறேன். என்ன நிபந்தனையின் பேரில் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஒத்துழைப்புக் கொடுப்பது என்று நாம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபொழுது–

(கௌரவ டட்லி சேனநாயக்கா)

அரசாங்க ஊழியர் விஷயம் பற்றி நாம் பேசினோம் என்று கூறுகிறீர்களா?

(திரு. வீ. நவரத்தினம்)

அதைப்பற்றித்தான்சொல்லி வருகிறேன், சேர், அந்தப் பேச்சுவார்த்தையில் பற்குபற்றியவர்கள், ஐ. தே. க. சார்பின் கௌரவ பிரதம மந்திரி அவர்களும் கௌரவ அரசாங்க மந்திரியவர்களும் (திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன), தமிழரசுக் கட்சிசார்பில் கௌரவ காங்கேசன்துறைப் பிரதிநிதியும் (திரு. செல்வநாயகம்) கௌரவ நல்லூர்ப் பிரதிநிதியும் (டாக்டர் நாகநாதன்) கௌரவ ஸ்தல ஸ்தாபன அமைச்சரும் (திரு. திருச்செல்வம்) நானும்—

(கௌரவ டட்லி சேனநாயக்கா)

அரசாங்க ஊழியர் விஷயம் பற்றிப் பேசினோம் என்கிறீர்களா?

(திரு. வீ. நவரத்தினம்)

அதைப்பற்றித்தான் பேசுகிறேன். உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம், அந்த ஒப்பந்தம் எனது கையெழுத்தில் உள்ளது, நானே அதை எழுதினேன், பேச்சுவார்த்தை முடிந்தபின் நானே அதை 'டைப்' அடித்தேன். கௌரவ அரசாங்க அமைச்சர் ஒத்துக் கொள்வார் என்று நினைக்கிறேன். கையெழுத்துப் பிரதி வெளிப்படுத்தப்படுமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அந்தக் கையெழுத்துப் பிரதியின் கடைசிப்பகுதியில் பின்வரும் வாசகம் இருக்கிறது.

''அரசாங்க ஊழியரைப்பற்றியவிஷயத்தில் சிலவகை அரசாங்க ஊழியருக்கு இரண்டு மொழிகளும் தெரிந்திருக்க வேண்டுமென்பதே எனதுகட்சியின் கொள்கையாகும் என்று திரு. சேனநாயக்கா வற்புறுத்திக் கூறினார். அன்றியும் அரசாங்க ஊழியர்.........''

இந்த இடத்தில் நின்றுவிட்டது. நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும், மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருந்தோம் என்பதை தமிழரசுக்கட்சியின் ஆதரவு தனக்குத்தான் உள்ளது என்று திருமதி பண்டாரநாயக்கா மகாதேசாதிபதியிடம் கூறியுள்ளார் என்றும், அரசாங்கம் அமைப்பதற்கு தன்னைத்தான் அழைக்கவேண்டும் என்று சொல்லியுள்ளார் என்றும், எந்தநேரத்திலும் அவர் இராணிமாளிகைக்குப் போக நேரிடும் என்று வதந்திகள் வந்துகொண்டிருப்பதையும் கௌரவ பிரதம மந்திரி அவர்கள் ஞாபகப்படுத்துவார்என்று நினைக்கிறேன். இப்படியான பரபரப்பான நிலையிலேதான் ஒப்பந்த விபரங்கள் பேசப்பட்டுக்கொண்டிருந்தன.

(திரு. இராசமாணிக்கம்)

முழுநேரமும் நீங்கள் அங்கே இருந்தீர்களா?

(திரு. வீ. நவரத்தினம்)

ஆம் – (சபையில் குழப்பம்) இடைமறித்துக் குழப்பமில்லாமல் இருக்கட்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒப்பந்தத்தின் இந்தக் கட்டத்துக்கு வந்தபொழுது சொன்னார்கள், அரசாங்க ஊழியர்பற்றிய உடன்பாடுகளை நிர்வாகஆணைகள்மூலம்நிறைவேற்றிக்கொள்ளலாம், அவற்றை எழுதத் தேவையில்லை என்று. எனவே அது விடுபட்டது.

(திரு. இராசமாணிக்கம்)

முழு நேரமும் நீங்கள்இருக்கவில்லை, நான் அங்கே இருந்தேன்.

(2_ம் பக்கம் பார்க்க)

## வேலரும் மயிலரும்



வேலர்: முருகர் பார்த்திட்டும் பார்க்காத மாதிரிப் போகிறார், என்ன சங்கதியோ?
மயிலர்: புதுக்கட்சி தொடக்கப் போகிறாராக்கும். தானும் ஒரு தலைவர் என்ட எண்ணம் போல!

# மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மெய்வல்லுநர் விளையாட்டு விழா, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவைக் கோப்பாய் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் ஆரம்பித்து வைக்க கல்லூரி அதிபர் திரு. பி. சுவாமிநாதசர்மா தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இவ்வைபவத்தில் யாழ்-மாவட்ட உதவி அரசாங்கஅதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

வெற்றி பெற்றோர் விபரம் (ஆண்கள்) 800 மீற்றர் ஓட்டம் பீ. திருநாவுக்கரசு, கே. சிவானந்தம், பி. தியாகராசா.

குண்டெறிதல்: பி. ஜெகநாதன், எஸ். சுந்தரலிங்கம், ஆர். விஷ்ணுசிங்கம்.

உயரம்பாய்தல்: எஸ். லோகேஸ்வரன், ரி. வத்சலகுமாரன், ஐ. செல்வரெட்ணம்.

500 மீற்றர்: ஓட்டம்: இ. குலநாயகம், கே. சிவநாதன், எஸ். சிவகுமார்.

கெந்தி அடித்து பாய்தல்: பீ. நடனசிகாமணி, எஸ். பஞ்சாட்சரம், எஸ். சந்திரகுமார்.

100 மீற்றர் ஓட்டம்: எஸ். தெய்வேந்திரம்' ஏ. டி. பேரின்பநாயகம், ஜி, திருச்செல்வம்.

500 மீற்றர் ஓட்டம்: பி. திருநாவுக்கரசு பி. தியாகராஜா, கே. சிவநாதன்.

பரிதி வட்டம் எறிதல்: எஸ். சுந்தரலிங்கம், கே. புவனேஸ்வரன், ஏ. றிச்சேட்.

400 மீற்றர் ஓட்டம்: ஏ. மகாலிங்கம், எஸ். குலேந்திரநாதன், ரி, குலேந்திரராஜா.

நீளம் பாய்தல்: பி. நடனசிகாமணி' எம். குகதாசன், ஈ. பஞ்சாட்சரம்.

200 மீற்றர் ஓட்டம்: எஸ். தெய்வேந்திரன், ஈ. பஞ்சாட்சரம், ஏ. மகாலிங்கம்.

பெண்கள் நிகழ்ச்சிகள்:

பரிதிவட்டம் வீசுதல்: கே. சொரூபராணி, எஸ். யோகமலர், எஸ். தயாநிதி.

உயரம் பாய்தல்: எஸ். கலாதேவி, எஸ். வனஜா, கே. நளினி,

400 மீற்றர் ஓட்டம்: எஸ், விமலா, ரி. இராஜேஸ்வரி, யே. யசிந்தாரோகினி.

100 மீற்றர் ஓட்டம்: மேரி எலிசபெத், எஸ். விஜயா எஸ். லதாதேவி.

நீளம் பாய்தல் பெண்கள்; ரி. மேரி எலிசபெத், எஸ். சதீஸ்வரி, எஸ். கலாதேவி.

குண்டெறிதல்: ஏ. பிலோமினு, எஸ். தயாநிதி, கே. சொரூபராணி.

200 மீட்டர்: ரி. மேரி எலிசபெத், பி. புவனேஸ்வரி, எஸ். ஜெயந்தினி.

மெய்வல்லுநர் வீராங்கனை: மேரி எலிசபெத், கே. சொரூபராணி.

மெய்வல்லுநர் வீரர்: பி. திருநாவுக்கரசு, பி. நடனசிகாமணி, எஸ். தெய்வேந்திரன். (கெ-இ)

## ஆயுர் வேத வைத்தியர்

### விண்ணப்பபடிப்வம்

வண்ணார்பண்ணை, ஞாயிறு

ஆயுர்வேத வைத்தியராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்பத்திரமும், பாடத்திட்டமும் ஒன்றுகவே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை மாற்றப்பட்டு இவ்விரண்டையும் தனித்தனியே பெற்றுக் கொள்ளக் கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விண்ணப்பப்பத்திரம் ஒரு ரூபாவாகவும், பாடத்திட்டம் இரண்டு ரூபாவாகவும் ஆயுர்வேத திணைக்களத்திஞல் விற்பனை செய்யப்படுகின்றன. பாடத் திட்டம் தேவைப்படாதவர்கள் விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் பெற்றுக் கொள்ள முடியும்.

## அனுதாபம்

யாழ்ப்பாணம், திங்கள்

அமரர் மூதறிஞர் செல்லாவின் மறைவு குறித்து அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் சங்கம்அனுதாபத் தீர்மானம் ஒன்றை ஏகமனதாகநிறைவேற்றியது. (இ)

## நாடகப் போட்டி

அரியாலை, ஞாயிறு

அகில இலங்கைத் திருவள்வர் மாகாசபை கல்விச் சகாய நிதிக்கு நிதிசேகரிப்பதற்காக நாடகப்போட்டியொன்றை அத்த மாதம் நடாத்த ஏற்பாடு செய்து வருகிறது.

உடுவில் திறந்தவெளியரங்சில் நடைபெறவிருக்கும் இந்நாடகப்போட்டியில் மிகச் சிறந்த நாடகங்கள் ஒரே மேடையில் போட்டியிடவிருக்கின்றன. (அ)

## முன்மாதிரி செயல் திட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

''தமிழ் ஈழம் ஒன்று உருவானுல், அங்கு நிர்வாக செயல் திட்டம் எல்லாம் என்ன மாதிரி பாரபட்சமற்ற முறையில், திறமையின் அடிப்படையில் இருக்கிறது என்பதற்கு இந்த நேர்முகப் பரீட்சை ,ஓர் எடுத்துக்காட்டாகும்.''

சாவகச்சேரி நகரமண்டப மேல்மாடியில், சாவகச்சேரித் தொகுதியில், ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நடந்த நேர்முகப்பரீட்சையை ஆரம்பித்துவைத்த சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினுர்.

முன்னுள் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சிதம்பரப்பிள்ளை தலைமையிலான குழு இந்த நேர்முகப் பரீட்சையை நடத்தியது.

திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது:- 'இந்த நேர்முகப் பரீட்சையில் 30 பேர் என் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டாலும், 30,000 பேருக்கு இந்த நேர்முகப் பரீட்சை நேர்மையான முறையில் நடந்துள்ளது என்ற திருப்திதான் தேவை.

இந்த குழுவிற்கு சர்வ அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது. இக்குழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகும் என்பதையும் இங்கு தெரிவிக்கின்றேன்.' [மட்-நி]

## அதிக விலையில் இறைச்சி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். நகரில் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி ஆகியன கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்கப்படுவதால் பாவனையாளர்கள் பலர் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறுர்கள் என்று தமக்குப் புகார் கிடைத்துள்ளதாகவும் இது பற்றி விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகரசபை விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளைப் பணித்துள்ளது. (இ)

# இளம் எழுத்தாளர் மாநாடு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இளம் எழுத்தாளர்களின் மகாநாடு ஜூன் மாதம் முற்பகுதியில் நடைபெறவிருக்கிறது.

இம் மகாநாட்டை நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

மகா நாட்டிற்கு மதுரை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புலவர் த. இராசமணி தலைமை வகிப்பார், நாட்டின் பல இடங்களையும் சேர்ந்த இளம் எழுத்தாளர்கள் பங்கு பற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் மகா நாட்டில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. (கு)

### யாழ். லங்கா ஆயுர்வேதக்கல்லூரி

# நிர்வாக அதிகாரி விளக்கம்

யாழ்ப்பாணம், திங்

ஆயுர்வேத ஆணையாளர் மாலை 3-30 மணிக்கு விமானத்தில்வரக்கூடும் எனநம்பி, நான் மாணவர்களிடம் கூட்டத்திற்கு வருபவர்களை விமான நிலயத்திலிருந்து நான் வரும் வரை பொறுத்திருக்குமாறு வேண்டும்படி கூறிவிட்டு, விமானநிலயத்திற்கு சென்று காத்திருந்தேன். விமானத்திலும் ஆணையாளர்வராததினுல் மாலை 4-15 மணிக்கு நிம்மர் மண்டபத்திற்குவந்தேன். அதன்பின் இரவு 7 மணிவரை கூட்டம் நடந்தது.

யாழ். லங்கா ஆயுர்வேத கல்லூரி நிர்வாக அதிகாரி டாக்டர் கெங்காதரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

யாழ். சித்த வைத்தியக் கல்லூரியின் விரிவுரையாளர்கள், மாணவர்கள் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டம் யாழ் அரசாங்க அதிபர் ஆயுர்வேத ஆணையாளர் யாழ். மாவட்ட அரசியல் அதிகாரி இவர்களது வேண்டுகோளுக்கு அமைய ஒத்திவைக்கப்பட்டது. தாங்கள் மேற்படி கல்லூரியின் பிரச்னைகளை பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்த்துவைப்பதாக உறுதி அளித்திருந்தனர். சென்ற மாதம் 18ம் திகதி கல்லூரி நிர்வாக சபை அங்கத்தினர் விரிவுரையாளர்கள் மாணவர்கள் அடங்கிய குழு ஆணையாளரை கொழும்பில் அவரது காரியாலயத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியது. அப்பேச்சுவார்த்தையின் போது கல்லூரியை அரசு அங்கிகரிக்க தாம் சகல நடவடிக்கைகளும் எடுப்பதாயும் கல்லூரிஆரம்பித்த நாள்முதல் 52 வருடங்களாக எதுவித அரசமானியமும் கிடைக்காது இயங்கிவந்த எமது கல்லூரிக்கு வருடாவருடம் அரச மானியம் பெறக்கூடிய நடவடிக்கையை தான் எடுப்பதாயும் வாக்குறுதி அளித்த ஆணையாளர் குழுவின் விருப்பத்திற்குஅமைய எமது கல்லூரி இயக்குனர் சபை; அங்கத்தவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோர்களையும் கண்டு கல்லூரியின் முன்னேற்றத்திற்கு வேண்டுவன செய்வதாகவும் வாக்குறுதி அளித்து இம்மாதம் 6ம் திகதி என்னுல் கூட்டப்பட்ட கூட்டத்திலும் கலந்துகொள்வதாக வாக்குறுதி அளித்திருந்தார். ஆனுல் அன்றைய கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளவில்லை என்பது உண்மை. ஆனுல் அவர் ஏன் கலந்துகொள்ளவில்லை என்பதை நானே அன்று வேறு எவரோ கூறிவிடமுடியாது. அவரேதான் அதற்குப் பதில்கூறவேண்டும்.

இம்மாதம் 6ம் தேதி ஆயுர்வேத ஆணையாளரின் வரவை எதிர்பார்த்து நான் தொடர்ந்து அவரிடமிருந்து எதுவித பதிலும் கிடையாததால் கொழும்பிலிருந்து யாழ்நகருக்குகாலை 5-20 மணிக்குவரும் மெயில்வண்டி, காலை 7-30 மணிக்குவரும் விமானம், 1-20 மணிக்கு வரும் யாழ்தேவி என்பவை மூலமாக ஆணையாளர்வரக்கூடும் என நினைத்து யாழ். புகையிரத நிலயத்திற்கும் பலாலி விமான நிலயத்திற்கும் சென்று ஆணையாளர் வராமையினுல் கூட்டத்தில் கலந்துகொள்ளும்முகமாக 4-15 மணிக்கு வந்தேன்.

அன்றைய கூட்டத்தில் ஒரு மாணவியின் பெற்றுர் என்ற முறையில் கலந்துகொண்ட தாயார் ஒருவர் மேடையை நோக்கி வந்து 'இக்கல்லூரி உருப்படாது' என்று கூறினுர். குறிப்பிட்ட பெண் துணிகரமாக மேடையைநோக்கி வந்து தெரிவித்த வாசகம்தான் அது. அவவின் கருத்து என்ன என்பதை கல்லூரியின் சார்பில் நான் அறியவிரும்புகின்றேன். கல்லூரி நலன்கருதி அவரின் கருத்தை பத்திரிகை வாயிலாகவே அறிய விரும்புகின்றேன். (க)

. போ. ச.

## யாழ்ப்பாணத்தில் தான் அதிகவருமானம்!

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைப் போக்கு வரத்து சபைக்கு சகல மாவட்டங்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்திலே, கூடுதலான வருமானம் கிடைத்துள்ளது. சென்ற வருடம், 22 லட்சம் ரூபாவுக்கு அதிகமாக லாபமீட்டியுள்ளது. (கெ)


# தலை போகிறதா






பாடசாலை செல்லும் பிள்ளைகளின் தாய்மார்களுக்கு அப்படித்தான்...
ஆனுல் கெமெக்ஸீனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால்
அப்படியிருக்கத்தேவையில்லை.
தலைப்பேனை முற்ருக ஒழிக்க துரிதமான, நம்பிக்கையான வழி அதுவே. உங்கள் பிள்ளைகளின் தலையில் கெமெக்ஸீனை ஒரு தடவை உபயோகித்தாற போதும்-
பேன் முற்ருக அழிந்துவிடும்.
மீண்டும் பேன் வராமல் தடுப்பதற்கு 3 வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகியுங்கள கெமெக்ஸீன் பாதுகாப்பானது.
புண்படுத்தாதது. இதமான வாசனையுடையது.

கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டட்,
த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு-1.
தெலிபோன்: 28421-6.

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி — சரோஜாதேவி
ஆலயமணி

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
பாபு

104-வது வெற்றித் தினம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
நடித்த
தினசரி 4 காட்சிகள்
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

RIO (Jaffna) Daily 4 Shows
CITY OF DEATH
(மரணத்தின் மாநகரம்)
(புத்தம் புதிய பிரதி)

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.—லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரம் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

REGAL (JAFFNA)
Daily: 10-30 a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் [யாழ். நகர்]
முத்துராமன் ஃ சுஜாதா
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ [யாழ். நகர்] போன்: 7693
விஜயகுமார்—லதா
நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

# ''தேர்தலில் போட்டியிட்டால்

# இளைஞர் பேரவையிலிருந்து

## 'காசி'யை வெளியேற்ற வேண்டும்''

கொழும்பு, ஞாயிறு

''கவிஞர் காசிஆனந்தன் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அவரை உடனடியாக தமிழ் இளைஞர் பேரவையில் வெளியேற்றவேண்டும்''

இவ்வாறு துரையப்பா கொலைவழக்கின் 5-வது சந்தேகநபரான தம்பிப்பிள்ளை சந்ததியார் நமது நிருபரிடம் ஆக்ரோஷத்துடன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை 'ட்ரயல்அட்பார்' நீதிமன்றத்தில் துரையப்பா கொலைவழக்கின் சந்தேநகபர்கள் ஏழுபேரும் ஆஜர்செய்யப்பட்ட சமயம் எமது நிருபர் சந்ததியாரை நீதிமன்றத்தில் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்இளைஞர்பேரவைக்கு பாராளுமன்ற தேர்தல்களில் நம்பிக்கையில்லை என்றும் எனினும் தமிழர்விடுதலைக் கூட்டணி எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்கும் என்றும் சந்ததியார் தெரிவித்தார். (ம-இ

## சம்பள உயர்வு கிடைத்தது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் வளாகத்தைச் சேர்ந்த சில்லறை ஊழியர்களுக்கு ஐம்பது ரூபா சம்பள உயர்வு கிடைத்துள்ளது சம்பள உயர்வு கோரி ஊழியர்கள் முன்னர் மகஜர் ஒன்றை அமைச்சுக்கு கையளித்திருந்தனர் (கு)

## ஆசிரியர் பற்றுக்குறை

யாழ்ப்பாணம், திங்கள்

அன்லை. தெற்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறை குறிதது பெற்றூர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. சு. தயாபரராசா, கல்விப்பகுதியினருக்கும் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரதனதுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இம்மகஜரில் குறிப்பிட்ட பாடசாலை கல்விபயிலும் 203 மாணவர்களுக்கு 4 ஆசிரியர்களே உள்ளனரென்றும் மேலதிகமாக மூன்று ஆசிரியர் நியமனம் செய்யும்படியும் கோரியுள்ளனர். (கெ)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி ஞாயிறு 10-30
பொம்மைக் கல்யாணம்

### ஆர். ஆர். தர்மரத்தினம்

## கட்சியிலிருந்து விலகி சுயேச்சையாகப் போட்டி?

நெல்லியடி, ஞாயிறு

லங்கா சமசமாஜ கட்சியின் வட பிரதேச அமைப்பாளரும், தலைவருமான திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் கட்சியிலிருந்து வெளியேறி, உடுப்பிட்டித் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடலாமெனத் தெரியவருகிறது.

கடந்த 28 ஆண்டுகளாக லங்கா சமசமாஜக் கட்சியின் வளர்ச்சிக்காக உழைத்துவந்த திரு. தர்மரத்தினம் லங்கா சமசமாஜக் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்களுள் ஒருவராவர். கடந்த 22 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக உடுப்பிட்டிக்கிராமசபையின் தலைவராகவும், கடந்த நான்கு ஆண்டுகளாக வல்லை கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவராகவும், சமசாஜகட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிற் சங்கங்களின் வடபகுதிப் பிரதிநிதியாகவும் இவர் இருந்து வருகிறார்.

லங்கா சமசமாஜ கட்சியிலிருந்து இவர் வெளியேறி சுயேச்சை வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிடும் போது, சோஷலிசக் கொள்கைகளையும், தமிழர் பிரச்னைகளையும் முன்வைத்தே பிரசாரத்தில் ஈடுபடுவாரெனவும் தெரியவருகிறது.

சமசமாஜ கட்சி சார்பில் கடந்த நான்கு பொதுத்தேர்தல்களிலும் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிட்ட இவரை, சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும்படி இவரது நெருங்கிய ஆதரவாளர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்தே, இவர் கட்சியிலிருந்து வெளியேறுவதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. சமசமாஜகட்சி வடபகுதியில் இம்முறை ஒரு அபேட்சகருக்காவது நியமனம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய கட்சி அமைக்கவும் திட்டம்

சுண்டிக்குளி, ஞாயிறு

இலங்கை சமசமாஜக் கட்சி தலைமைப்பீடத்திற்கும், வட பிரதேசத்தில் உள்ள அதன் கிளைகளுக்கும், மார்க்ஸிஸ ஆதரவாளர்களுக்குமிடையே தமிழ்ப் பேசும் மக்களின் இன்றைய நிலை குறித்து கருத்து வேற்றுமைகள் நிலவுவதாகத் தெரியவருகிறது. இதன் எதிரொலியாக இவை, இலங்கை சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து, ''தமிழர் மார்க்ஸிஸ கட்சி'' என்ற ஒரு அரசியல் கட்சியை சமசமாஜப் பிரமுகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் உருவாக்கலாம் என்றும் வடபகுதி சமசமாஜ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புதிய கட்சி அமைக்கப்படும்பட்சத்தில் வடபகுதியில் தேர்தலில் குதிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இம்முயற்சி கைகூடாவிட்டால், சமசமாஜ கட்சியின் முக்கிய 'பெரும் புள்ளிகள்' சிலர், கட்சியில் இருந்து விலகி சில தொகுதிகளில் சுயேச்சை அபேட்சகர்களாகத் தேர்தலில் போட்டியிடலாம் என்றும், நல்லூர், உடுவில், கினிநொச்சி, உடுப்பிட்டி ஆகிய தொகுதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

தினசரி 4 காட்சிகள்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈட்ஸ்மன் கலர்)

''திருவருள்'' புரியும் பக்திரசமான 2 வது வாரம்
வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்! இது ஞானவேல்!
யாவும் நிறைந்த தங்கவேல்! வருக! வருக!
நீமயிலேறி வருக!

திருவருளை தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளை காணாத கண்ணென்ன கண்ணே

தினசரி 4 காட்சிகள்
ராஜா (யாழ்நகர்)
ஏ. வி. எம். ராஜன்
கிருபானந்தவாரியார், நாகேஷ்,
சுந்தரராஜன், நடித்த
தேவரின்
திருவருள்
டைரக்ஷன்: ஆர். தியாகராஜன்
(ஈஸ்ட்மன் கலர்)



## ''இளைஞரின் சக்தி வறுமையை அகற்றும்''

### அமைச்சர் பெரேரா உரை

கொழும்பு, ஞாயிறு

''இளைஞர்களது நலனில் அக்கறை செலுத்துவதன் மூலம் அவர்களது பங்கை நாட்டு முன்னேற்றத்தில் பெற முடியும்'' என்று தகவல்-ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா களனியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார். அமைச்சர் மேலும் பேசுகையில், ''இளைஞர்கள் தமது பிரச்னைகளுக்குத் திடீர் பரிகாரம் காண முற்பட்டால் அனர்த்தமே விளையும்.

''இளைஞர்களின் சக்தியைப் பயன்படுத்தினால் நாட்டில் வறுமையை அகற்ற முடியும்'' என்றார். [உ]

## மாணவி மர்ம மறைவு

கொழும்பு, ஞாயிறு

பாடசாலைக்குச் சென்ற பத்து வயது மாணவி ஒருவர் கடந்த 10ம் திகதியிலிருந்து காணமல்போய்விட்டாரென கறுவாக்காடு பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நிலானி விஜயசிங்க என்ற இம்மாணவியைத் தேடிக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். [உ]

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் ஃ விஜயகுமாரி ஃ அசோகன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பவானி

ஈழநாடு
The EELANADU

## தமிழ்மக்கள்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கட்சி பற்றி திரு. யோகேந்திரா துரைசாமி பேசுகையில், ''மிகவும் பாரம்பரியமான கலை, கலாச்சாரம், மொழி, பண்பாட்டைவளர்க்க நாம் குறுகியகாலத் திட்டமொன்றைக் கையாண்டு செயல்படவேண்டும். தமிழர்களுடைய நலனைப்பேண நீண்டகால திட்டங்களை பலர் வகுத்திடினிலும், அவைகளால் இதுவரை எமக்கு பயன்எதுவும் இல்லை. பல அரசியல் தலைவர்கள் தம்மைத் தாமே, உயர்த்தினரே ஒழிய சுயமாக எம் இனத்துக்கு எதையும் செய்யவில்லை. நாம் அமைத்துள்ள பொது வேலைத்திட்டத்தின் மூலம் குறுகிய காலத்தில் ஒருங்கிணைந்து பிரதேசசுயாட்சியை பெறுவோமேயானால் நிச்சயமாக நாம் நம்மை கௌரவப் பிரசையாக்கிக் கொள்ளமுடியும். விரைவில், இப் புதிய கட்சி பரவலாக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கூறினர். (கெ)

## தி. மு. கவின் புதிய
# செயலாளர் அன்பழகன் பொருளாளர் சாதிக்பாட்சா
## மதுரையில் ஏகமனதாகத் தெரிவு

மதுரை, மே 15

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக பேராசிரியர் க. அன்பழகனும் பொருளாளராகதிரு. சாதிக்பாட்சாவும் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரையில் இன்று நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்தில் இத்தேர்வு ஏகமனதாக நடைபெற்றது.

கழகத்தின் செயற்குழுஉறுப்பினர்கள் 577 பேரில் 462 பேரும் 110 பிரிவு அமைப்பாளர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதாக கூட்ட முடிவில் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி நிருபர்களிடம் தெரிவித்தார்.

தமக்கு உதவிச் செயலாளர் ஒருவர் தேவையென்ற கோரிக்கையை பொதுக்குழுஅங்கீகரித்தது என்றும் கலைஞர் சொன்னார்.

பொதுக்குழுச் சட்டதிட்டங்களில் சில திருத்தங்கள் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நாவலர் நெடுஞ்செழியன் கழகத்தில் இருந்து ராஜினாமா செய்ததையடுத்து பொதுச் செயலாளர் பதவி நிரப்பப்படாமல் இருந்தது தெரிந்ததே. (உ)

# வேலை நிறுத்தம்
## மீண்டும் நடக்கலாம்

யாழ்ப்பாணம், திங்கள்

சுகாதார சேவையைச் சேர்ந்த 40 தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம் முடிவடைந்தபோதிலும் மீண்டும் வேலை நிறுத்தம் நடைபெறும் அறிகுறிகள் தென்படுகின்றன.

சுகாதார சேவையைச் சேர்ந்த 40 தொழிற்சங்கங்களின் பொது வேலைநிறுத்தம் கடந்த வெள்ளியன்று சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து கைவிடப்பட்டு வேலைக்குத் திரும்பினர். அவர்களது கோரிக்கையான சீருடையையும் மேலதிக ஒய்வூதியம் 20 ருபா அலவன்ஸையும் வழங்க உறுதியளிக்கப்பட்டது. எனினும் எட்டு மணித்தியாலச் சட்டப்படி வேலைபற்றிய கோரிக்கை பற்றி இன்னும் முடிவாகவில்லை. இதற்கான பேச்சுவார்த்தை இன்று திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது

இக்கோரிக்கை நிறைவேருத பட்சத்தில் சுகாதார சேவையாளர் மீண்டும் வேலைநிறுத்தத்தில் குதிக்கலாமென்று தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (கெ)

## மலையக—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து புறப்படும் இவ்வூர்வலம் அரியாலை நோக்கிச் செல்லும்.

அன்றையதினம் குடியரசு தினமாக இருப்பதால் அதனையொட்டி எதிர்ப்புக்கூட்டம் ஒன்றை நடாததவும் இளைஞர் பேரவை ஒழுங்குகள் செய்கிறது.

ஊர்வலததில் சேரவிரும்பும் தொண்டர்கள் முதலிலேயே தங்களின் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும்படி இளைஞர் பேரவை அறிவிக்கிறது.

சகல மாணவர்களும், இளைஞர்களும் இளைஞர் பேரவைக் கிளைகளும் மகளிர் பேரவைக் கிளைகளும் இக்கூட்டததில் கலந்து கொள்ள வேண்டுமென்றுகோரப்படுகிறது. (கி)

## பேரிழப்பு!

யாழ்ப்பாணம், திங்கள்

மூதறிஞர் செல்வாவின் மறைவு இந்நாட்டு தமிழருக்கு மட்டுமல்ல, உலகில் பரந்துவாழும 6கோடி தமிழர்களுக்கும் பேரிழப்பாகும்.என்று அராலி சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர்: திரு. ஏ. மார்க்கண்டேயர் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (கெ)

## வேட்பாளர் தெரிவில் அதிருப்தி:
# 152 காங்கிரஸ் உறுப்பினர்கள் ராஜினுமா!

சென்னை, மே.15

திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்துடனுன தேர்தல் உடன்பாட்டுப் பேச்சுவார்த்தை முறிவுற்றதுகுறித்து காங்கிரஸ் காரியகமிட்டி உறுப்பினர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் உடன்பாடு ஏற்பட்டது குறித்து அவர்கள் வரவேற்புத் தெரிவித்தனர்.

### வேட்பாளர் தெரிவில் அதிருப்தி

இதேவேளை சட்டசபைத் தேர்தலுக்கு வேட்பாளர் தெரிவு செய்யப்பட்ட விதம் குறித்து கண்டனம் தெரிவித்து பிரதேச காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் 140 பேரும் அகிலபாரத காங்கிரஸ் கமிட்டியில் இருந்து 12 உறுப்பினர்களும் பல்வேறு மாவட்ட உறுப்பினர்களும் ராஜினுமாச் செய்துள்ளனர்.

காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் 700 உறுப்பினர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவித்த கட்சியின் செயலாளர்களில் ஒருவரான திரு பி,நெடுமாறன்; திரு. கருப்பையா மூப்பனுரது ராஜினுமாவையடுத்து காலியான தலைவர்பதவிக்குப் பதிலாக மேலதிக கமிட்டி ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்று மேலிடத்தை நிர்வாகக்கமிட்டிகோரியிருப்பதாகவும் சொன்ஞர். (உ)

## ''மிளகாய், வெங்காய உற்பத்தியில் யாழ். விவசாயிகள் பேரார்வம்''
### மஹாரையில் பிரதமர் உரை

கொழும்பு, ஞாயிறு

''இன்றைய அரசாங்கம் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் மூலம் யாழ்.மாவட்ட விவசாயிகள் மிளகாய், வெங்காய உற்பத்தியில் பேரார்வம் காட்டி இலாபம் மிகப் பெற்றனர்'' என்று பிரதம மந்திரி திருமதி சிறிமரவோ பண்டாரநாயகா கூறினர்.

இன்று மஹாரையில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தபின் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு சொன்ஞர்.

### அரசின் சாதனை

அவர் மேலும் பேசுகையில் ''கடந்த 1971-ம் ஆண்டு நடைபெற்ற கிளர்ச்சிகளை முறியடித்து'' அரசைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியை நிறைவேருது செய்தது எமது அரசு செய்த பெரும் சாதனையாகும்.

வேறு எந்த அரசாங்கம் அந்நேரத்தில் இருந்திருந்தாலும் கிளர்ச்சியில் ஈடுபட்ட 18,000 இளைஞர்களும் இன்று உயிருடன் இருந்திருக்கமாட்டார்கள்.

உள்நாட்டுக் கலவரத்தில் அப்போது ஈடுபட்டவர்கள் இருதினங்களுக்குள் சரணடைய வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டபோது 10,000 இளைஞர்கள் சரணடைந்தனர்.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று சிலர் இப்போது பேசிவருகிறார்கள். அரசியல் கைதிகள் என்று இன்று இந்நாட்டில் எவருமே இல்லை.

நீதிமன்றத்தில் 'குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டவர்களே தண்டனை அனுபவிக்கின்றனர்' என்ருர்.

## மரண அறிவித்தல்
### கனகசபை கந்தையா
(சக்திவேல் கடைச்சல் தொழிற்சாலை)

பண்டத்தரிப்பைச்சேர்ந்தவரும் சக்திவேல்கடைச்சல் தொழிற்சாலையின் உரிமையாளரும், கனகசபை, சொர்ணம்மாவின் அன்பு மகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சபா. நடேசன், நிர்மலானந்தன், திலகவதி, சுகிர்தவதி, கலாவதி, லிங்கேஸ்வரன், தேவகனி, வரதலட்சுமி ஆகியோரின் அன்புத்தந்தையும், உருத்திரசிங்கம், சிவபாக்கியம், நாகரெட்டினம், கண்மணி, ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் வடலியடைப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அங்கிருந்து திங்கட்கிழமை பிற்பகல் 2-00மணியளவில் பூதவுடல்எடுத்துச் செல்லப்பட்டு விளாவெளி மயானத்தில் தகனம் செய்யப்படும். 6198

## மரண அறிவித்தல்
### கந்தர் விசுவலிங்கம்

யாழ்ப்பாணம் பருத்தியடைப்புப் பிரபல இரணவைத்தியர் றுப்பி அட்வடைசர் உரிமையாளருமான திரு. கந்தர் விசுவலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார்கள். இவர் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி புனிதவதி சிவசாமி, ஊர்காவற்றுறை கிராமசேவையாளர் கந்தவேள் ஆகியோரின் தந்தையாரும், வதுளை எலதழுவ பாடசாலை அதிபர் சின்னத்தம்பி சிவசாமி, திருமதி கதிரநாயகமணிகந்தவேள் ஆகியோரின் மாமனுரும் வெள்ளவத்தை கந்தர் நாராயணசாமி (ஒய்வு பெற்ற எழுதுநர், புகையிரத இலாகா), திருமதி சிவக்கொழுந்து வேலுப்பிள்ளை, திருமதி தெய்வானைப்பிள்ளை முருகுப்பிள்ளை ஆகியோரின் சகோதரருமாவர். அன்னரது பூதவுடல் 16-5-77 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் இல. 18, வேம்படி வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் விஸ்லூான்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உறவினரும் நண்பரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேம்.

18, வேம்படி விதி, யாழ்ப்பாணம். 15-5-77

## குதிரையால் ஏற்பட்ட குழப்பம்

சென்னை, மே 15

சென்னை கிண்டியில் உள்ள குதிரைப்பந்தயத்திடல் இன்று போர்க்களமாகியது.

வெற்றிபெறும் என்று நம்பப்பட்ட குதிரை ஒன்று கடைசி நேரத்தில் வாபஸ் பெறப்பட்டதனையடுத்து கற்கள் வீசப்பட்டன. நாற்காலி, மேசைகள் நொறுக்கப்பட்டன.

தீவைப்பும் இடம்பெற்றது. பொலிசார் கண்ணீர்ப்பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர். (உ)

## ஜெ. பி.க்கு தமிழ்நாட்டில் பிரார்த்தனை

சென்னை, மே 15

தற்போது அமெரிக்காவில் உள்ள மருத்துமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவரும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் விரைவில் பூரண சுகம்பெற வேண்டி மயிலாப்பூர் அபாஸ்வர ஆலயத்தில் இன்று விசேட பூஜை நடைபெற்றது.

தமிழக ஆளுநர் திரு. பட்வாரியும் கலந்து கொண்ட இப்பூஜையை காந்தி சமாஜம் ஏற்பாடு செய்திருந்தது [illegible]

## காங்கேசனில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தவிர்க்க திரு.சிவசிதம்பரத்தை வேட்பாளராக நியமித்தது போன்றே காங்கேசன்துறையிலும் காங்கிரஸ் - தமிழரசு மோதலைத் தவிர்க்கும் பொருட்டே திரு. அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஒரேநாளில் ஒன்பது பிள்ளைகள்

டாக்கா, மே 15

ஒன்பது பிள்ளைகளை ஒரேநாளில் பெற்றெடுத்தார் ஒரு பெண்.

முழு உலகையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ள இந்த அதிசய சம்பவம் பங்களாதேஷில் இடம் பெற்றுள்ளது.

முப்பது வயது நிரம்பிய பிரஸ்தாப பெண் முதலிரு மணித்தியாலங்களில் இரு சிசுக்களைப் பெற்ருர். இருபது மணித்தியாலங்களின் பின் மேலும் ஏழு பிள்ளைகளை இவர் பெற்றெடுத்தனர்.

இச்சிசுக்கள் அனைத்தும் சொற்ப நேரத்தில் இறந்துவிட்டன. (உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு', லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் நல்லூர் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanaadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.